Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 19 திங்கட்கிழமை (02.06.2014) பக்கங்கள் 20 ஓசை - 244

AXSHAYA CONSTRUCTION JAFFNA

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0776679564

(C/3690)

## இந்திய மீனவர்கள் 29 பேர் தலைமன்னார் கடலில் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 29 இந்திய மீனவர்கள் தலை மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்கள் 6 படகுகளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள், தலை மன்னார் கடற்றொழில் திணைக்களத்திடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் இந்திய மீனவர்களை நாளை (19) பக்கம் பார்க்க...

# மோடி ஊடாக அழுத்தம்; கூட்டமைப்பின் முயற்சி பலிக்காது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியப் பிரதமர் ஊடாக அரசு மீது அழுத்தம் பிரயோகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சி எதுவும் வெற்றியளிக்கப்போவதில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சில புலம் பெயர் அமைப்புக்களும் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஊடாக இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகித்து அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் செய்வதற்கும் முயற்சித்து வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு அரசு ஒருபோதும் இடமளிக்கமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அதிகாரப்பகிர்வு குறித்து இந்தியா, இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க (19) பக்கம் பார்க்க...

# வடக்கு இலங்கையுடன் இந்தியா நேரடித் தொடர்புகளை வைக்கக்கூடாது

## சுப்பிரமணியம் சுவாமி கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் வடக்கு தமிழ் அரசியல் தலைவர்களுடன் இந்திய மத்திய அரசு நேரடித் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடாது என்று ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பங்களாதேஷில் உள்ள இந்துக்களுடன் இந்தியா நேரடியாகத் தொடர்பு கொள்ளும் உரிமை இல்லை.

இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுடன் பாகிஸ்தானால் தொடர்பு கொள்ளமுடியாது. அதேபோன்று இலங்கையில் உள்ள தமிழர்களுடன் இந்திய அரசாங்கம் நேரடியாகத் தொடர்பு கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இன்றி, தமிழர்களுக்கு (19) பக்கம் பார்க்க...

## பால்மா மீதான வரியை நீக்க ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

பால்மாவின் விலையை குறைப்பதற்கு, அதன் மீதான வரியை நீக்க வேண்டும் என்று ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பால்மா நிறுவனங்கள் அதிகரித்த விலையில் பால்மாவை இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் எதிர்வரும் சில மாதங்களுக்கு பால் மா விலையைக் குறைக்க முடியாது என்று அரசாங்கம் தெரிவித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு, பால்மா மீதான வரியை நீக்கி அதன் விலையைக் குறைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

# வடமாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதில் தவறு இல்லை

## அமைச்சர் டியூ. தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் சிக்கல் எதுவும் இல்லை என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். ஹட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ், இலங்கையில் காணப்படுகின்ற அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் புத்தக வடிவில் உள்ளன. இந்த பிரச்சினையை விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும். காணிப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு சுயாதீன ஆணைக் குழுவை நியமிக்க வேண்டும். இதனை ஜனாதிபதியிடமும் தாம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பொலிஸ் அதிகாரங்களைப் பொறுத்தவரையில் வடமாகாண (19) பக்கம் பார்க்க...

## யாழ்ப்பாணம் வரை ரயில் சேவை; மேலும் தாமதமடையும்

### புகையிரதத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாவற்குழி பாலம் புனரமைக்கும் பணிகள் பூர்த்தியாக்கப்படுவதில் ஏற்பட்டிருக்கும் காலதாமதம் காரணமாக யாழ்.நகர் வரையான ரயில்சேவையை ஆரம்பிப்பதில் மேலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் கிளிநொச்சியிலிருந்து பளை வரை தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ள வடக்கிற்கான ரயில் சேவைகள் இம்மாத இறுதிக்குள் சாவகச்சேரி வரை இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகளை விஸ்தரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், நாவற்குழிப் பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் காரணமாக தாமத மடைந்திருந்ததாகவும் விரைவில் பணிகள் பூர்த்தியடைந்து யாழிற்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்க[...] புகையி (19) பக்கம் பார்க்க...

## ஒரே குடும்பத்தில் இருவரின் சடலங்கள் கட்டைக்காட்டில் நேற்று மீட்பு

யாழ்.மருதங்கேணி கட்டைக்காடு, நித்தியாவட்டை காட்டுப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரின் சடலங்கள் நேற்று பருத்தித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தினைச் சேர்ந்த மரியதாஸ் மகேஸ்வரன் (வயது -28) மற்றும் மகேஸ்வரன் அனுராஜ் (வயது-3) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள் ளன.

கடந்த பல மாதங்களாக கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்றது. குடும்பத் தகராற்றினால், பருத்தித்துறை நீதிமன்றில் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை கணவன் மனைவி இருவருக்கும் பருத்தித்துறை நீதிமன்றில் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது.

(19) பக்கம் பார்க்க...


# மோடிக்கு வாழ்த்து; நல்லூரில் பேரணி



இந்தியப்பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவிக்கும் முகமாக இந்து சமயப் பேரவையின் நடைபவனி ஒன்று நேற்று யாழில் நடைபெற்றது.

இலங்கை-இந்திய நட்புறவுக் கழகமும், இந்து சமயப் பேரவையும் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர். இந் நடைபவனி யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து நேற்றுக்காலை 9.00 மணயளவில் ஆரம்பிக்கப்பட்டு, இந்து சமயப் பேரவையில் நிறைவடைந்தது. (25)

# மக்களின் நலன்களுக்கு விரோதமாக ஒருபோதும் நாம் செயற்படுவதில்லை



இயற்கை வளங்களுக்கோ மக்களின் நலன்களுக்கோ மாறாக நாம் ஒருபோதும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்று இடம்பெற்ற மகேஸ்வரி நிதியத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதி உள்ளிட்ட ஏனைய பகுதிகளினதும் அபிவிருத்தி தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம். குறிப்பாக, அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களது வாழ்வாதாரம், சுயதொழில் வாய்ப்பு உள்ளிட்ட விடயங்களில் எதிர்காலத்தில் துறைசார்ந்தோர் ஊடாக திட்டங்கள் வகுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இருந்தபோதிலும், மக்களை குழப்பும் வகையில் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக எமது கட்சியினதும் மகேஸ்வரி நிதியத்தினதும் பெயரை தமது சுயலாப அரசியலுக்காக தவறான வழியில் பயனபடுத்தி ஆதாயம் தேட முயல்கின்றனர்.

இதுவிடயத்தில் மக்கள் தெளிவாகவும் விழிப்புடனும் உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

நாம் மக்கள் விரோத மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அல்ல அது போன்று எதிர்காலத்திலும் அதற்கு இடங்கொடுக்கப்போவதில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

எமது பக்கம் தவறு இருக்குமேயானால் மக்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதே எமது விருப்பமாகுமென்பதுடன் இப்பகுதியின் இயற்கை வளங்களுக்கோ மக்களின் நலன்களுக்கோ புறம்பாக நாம் எவ்விதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லையென்றும் எதிர்காலத்திலும் குறித்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுவோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் வகையில் மரநடுகை திட்டத்தை மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுப்பதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்த பங்களிப்பை வழங்கி இந்நடவடிக்கையினை வெற்றியடையச் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே அம்பன் பகுதி மக்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் சுயதொழில் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்போது வடமராட்சி கிழக்கு உழவியந்திர உரிமையாளர் சங்கத்தை அமைப்பது, மணல் ஏற்றும் தொழிலாளர்கள் சங்கத்தை அமைப்பது மற்றும் மின்சாரம், போக்குவரத்து, வீதிப்புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் ரஜீவ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருலிங்கநாதன், அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா உள்ளிட்ட அம்பன் பகுதி மக்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

## நினைவாலயத் திறப்பு விழா

மறைந்த விளையாட்டு வீரரும் சமூக சேவையாளருமான கம்பர்மலை வேலுப்பிள்ளை நினைவாக நினைவாலய திறப்பு நிகழ்வும் மலர்வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

வே.பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு வே. கமலநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மலர் வெளியீட்டில் மலரின் அறிமுகவுரையை கி.நவநீதனும் மதிப்பீட்டுரைகளை சு.குணேஸ்வரன், வேல் நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள். சி.பாலமுரளி ஏற்புரை நிகழ்த்தினார்.

மலரில் மறைந்தவர் பற்றிய நினைவுக்குறிப்புக்களுடன் மாணவருக்கும் ஏனையவர்களுக்கும் பயன்படத்தக்க பயன்மிக்க கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

மேலும் விளையாட்டுத்துறை கலைத்துறை கல்வித்துறை சார்ந்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழவும் இடம்பெற்றது. தம்மை பெற்று வளர்த்து இந்த சமூகத்தில் ஆளாக்கிய தந்தைக்கு நினைவாலயம் அமைத்து கௌரவப்படுத்தியமை இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியான செயற்பாடாக அமைந்துள்ளது. (63)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள் 15 45 46 70

போனஸ் இல: 58

ஜக்பொட் பரிசு ரூ.18,004,175/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 196564 | 20/- | 3,931,280/- |
| 2 இல | 14106 | 100/- | 1,410,600/- |
| 3 இல | 282 | 1,000/- | 282,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7785 | 40/- | 311,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 535 | 1,000/- | 535,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 1 | 18,004,175/- | 18,004,175/- |
| 1 இல + போனஸ் இல | 9356 | 100/- | 935,600/- |
| 2 இல + போனஸ் இல | 436 | 500/- | 218,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 386 | 200/- | 77,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 1 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 229481 | | 27,269,255/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.06.04 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3674)


# இலத்திரனியல் கழிவு அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபையினரால் இன்று காலை 8.30 மணிமுதல் பி.ப. 4.30 மணி வரை இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணக் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் சொ.ஜக்கீல் தெரிவித்துள்ளார்.

இந்தக் கழிவுப் பொருட்களை உள்ளூராட்சி சபையினால் அறிவிக்கப்பட்ட இடங்களிலோ அல்லது சபை அலுவலகத்திலோ ஒப்படைக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தக் கழிவுப் பொருட்களை உடைப்பதனாலோ அல்லது வீசுவதனாலோ அதன் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்ந்து நீரை நச்சுத்தன்மை அடையச்செய்யும் என்பதுடன் எதிர்காலத்தில் பல்வேறுபட்ட நோய்த்தாக்கங்களுக்கும் இது காரணமாக அமைவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே எமது எதிர்காலச் சந்ததியினரின் நன்மைகருதி பொதுமக்கள் இந்தக் கழிவுப் பொருட்களை சபை அலுவலகங்களிலோ அல்லது உள்ளூராட்சி சபையினால் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களிலோ ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (11)

# வெற்றுக்காணிகளில் நாற்றமெடுக்கும் கழிவுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் உள்ள வெற்றுக்காணிகளில் கழிவுப்பொருட்கள் தேங்கிக் காணப்படுவதாக அப்பகுதி பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள சில காணிகளில் காணிச் சொந்தக்காரர்கள் வேறு இடங்களில் வசித்துவரும் நிலையில் அக்காணிகளுள் பற்றைகள், செடிகள் வளர்ந்து காணப்படுவதுடன், தேவையற்ற கழிவுப் பொருட்களும் தேங்கிக் காணப்படுகின்றன.

குறித்த காணிகளுக்குள் இறந்த விலங்குகளின் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகளை கட்டாக்காலி நாய்கள் கொண்டுவந்து போடுவதுடன், பழைய போத்தல்கள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களும் காணப்படுகின்றன.

இப்பழைய பொருட்களுக்குள் மழைநீர் நிறைந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்[illegible] நோய் பரவ வாய்ப்புள்ளதாகவு[illegible] அப்பிரதேச பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறு வெற்றுக்காணிகளில் தேங்கும் கழிவுப் பொருட்களை சம்பந்தப்பட்டவர்கள் அகற்றி சுகாதாரமான வாழ்வுக்கு வழியேற்படுத்துமாறு பாதிக்கப்படும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## இன்று மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ விஷ்வலிங்க மகா கணபதி பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகின்றது.

இன்று காலை 6.50 முதல் 7.15 வரையான சுபவேளையில் க.மு.சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

கும்பாபிஷேகம் சிறக்க நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், நல்லை ஆதீன பிரதம குருக்கள் தேசமான்ய கு.ஜெகதீஸ்வரக் குருக்களும் ஆசியுரை நிகழ்த்துவர்.

## விளையாட்டு மைதானத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் உள்ள மிக முக்கியமான விளையாட்டு அரங்குகளில் ஒன்றாக மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கு விளங்குகிறது. பல முன்னணி விளையாட்டு வீரர்களையும் கலைஞர்களையும் உருவாக்கிய பெருமையையும் கொண்டது. ஆனால் தற்போது கவனிப்பாரற்று கிடக்கிறது.

மானிப்பாய் பிரதேச சபையின் கீழுள்ள இவ் மைதானத்தை புனரமைப்பு செய்ய அதிகாரிகளால் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளபடவில்லை. இங்கு போட்டிகளை நடாத்துவதற்கு பிரதேச சபையிடம் பணம்செலுத்தி அனுமதியும் பெற வேண்டியுள்ளது.

ஆனால் எதுவித அபிவிருத்திகளும் இம்மைதானத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அரங்கத்தின் கூரைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதுடன், அரங்கம் ஆடு, மாடுகள் தங்கும் இடமாக மாறியுள்ளது.

இதனைத் திருத்தி உரிய வகையில் பராமரிக்க பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என பிரதேசத்தவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

மானிப்பாய் பகுதியிலுள்ள பிரதானமான மைதானமாக இது திகழ்வதுடன் கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்தக்கூடிய மைதனமாகவும் உள்ளது.

எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து புனரமைக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (48)


## சிறுவிளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை. வருகைதரும் தினமே சேர்த்து[illegible] கொள்ளப்படுவர். (உற்பத்[illegible] பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வயது வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 071 085 4068.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வயது வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00 - 35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299 (C/3698)

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3595)

# யாழில் ஆக்கிரமிக்கும் பார்த்தீனியம் உடனடி நடவடிக்கை அவசியம்



(யாழ்ப்பாணம்)

யாழில் பார்த்தீனியத்தின் படையெடுப்பு அதிகரித்து வருகின்ற நிலையில் பார்த்தீனிய ஒழிப்பு குழுவினர் பாராமுகம் காட்டி வருகின்றனர்.

யாழ்.வேம்படி வீதிப்பகுதி மற்றும் யாழ்.ஒல்லாந்தர் கோட்டை உட்பட பல்வேறு இடங்களில் பார்த்தீனியத்தின் படையெடுப்பு அதிகரித்து காணப்படுகின்றன. கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக அதிகரித்துள்ள பார்த்தீனியத்தினை ஒழிப்பதற்கு யாரும் முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்வேம்படி சந்தியில் பார்த்தீனியத்தினை வளர்ப்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் அறவிடப்படுமென பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், அந்தப் பதாகையின் கீழும் பார்த்தீனியச் செடி வளர்ந்து பூத்துக் காணப்படுகின்றன. ஆனால், நகர சுற்றாடல் அபிவிருத்தித் திணைக்களத்தினரோ அல்லது வடமாகாண விவசாய மற்றும் கால் நடை அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினரோ பார்த்தீனியத்தின் படையெடுப்பினை கண்டும் காணாமலும் செல்கின்றார்கள்.

பார்த்தீனியத்தினை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்று கூட வேண்டுமெனக் கூறும் அதிகாரிகள் கூட பார்த்தீனியத்தினை ஒழிப்பதற்கான செயற்பாடுகளில் இறங்குவதற்கு தாமதம் காட்டிவருகின்றனர். கடந்த காலப் பகுதியில் யாழ்.பாதுகாப்பு படையினர் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், இந்தப் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர். அதன் பின்னர் பல இடங்களில் பார்த்தீனியத்தினை கண்களில் காண முடியாமல் இருந்த போதிலும், தற்போது யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், பார்த்தீனியத்தின் படையெடுப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது.

அந்த வகையில், வடமாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசனிடம் தொடர்பு கொண்டு பார்த்தீனியத்தின் அதிகரிப்பு தொடர்பில் வினவிய போது, மழைக்காலத்தில் பார்த்தீனியத்தின் படையெடுப்பு அதிகரித்துள்ளதாகவும் இப்பார்த்தீனியத்தினை அழிப்பதற்கான நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (25)

## அம்புலன்ஸ் படகு அனலைதீவுக்கு அன்பளிப்பு

அனலைதீவு வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் படகு ஒன்று வழங்கப்பட்டிருப்பதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.


கடந்தவாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டே அவர் இந்தத்தகவலைத் தெரிவித்துள்ளார். (பா)

# நற்பண்புச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புண்ணிய கிராம ஒருநாள் நற்பண்புச் செயலமர்வு அண்மையில் உரும்பிராய் தெற்கு சிவபுரீஸ்வரர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கோப்பாய் பிரதேசசெயலர் செல்வி பிறேமினி சபாரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.கோமாதா பூசையை ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.குமார புலேந்திரக் குருக்கள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் தெற்கு வீதியில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் மரம் நடுகை இடம்பெற்றது. ஆசிரியர் செ.பாலச்சந்திரன் "விரதங்களும் பண்டிகைகளும்" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். கோப்பாய் பிரதேச் செயலகத்துக் குட்பட்ட ஐந்து அறநெறிப் பாட-சாலை மாணவர்கள் பங்குபற்றிய கலைநிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (63)



யாழ்.பல்கலைக்கழக உளவியல் மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய வழிகாட்டல் மையத்தினர் மாணவர்களிடையே நினைவாற்றலை மேம்படுத்தும் நோக்குடனும் அதிகரித்துவரும் மதுபோதைப் பொருள் பயன்பாட்டைக் குறைக்கும் முகமாகவும் பரீட்சைக்கு எவ்வாறு தயார் செய்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி மாணவர் வழிகாட்டல் நிகழ்வொன்றினை யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்றபோது... (48)

# அவை இவை செய்யேல்லை எண்டதை விட்டிட்டு நீங்கள் என்ன செய்வியள் எண்டதைச் சொல்லுங்கோ....




**இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு இப்ப - கடைசியாகக் கிடைச்சிருக்கிற ஒரு காய் மோடி. 'மோடி அந்த மாதிரிக்காய்'** எண்ட கணக்கில கன விளையாட்டுகள் தொடங்கீட்டுது.

சம்பந்தன் மோடிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் மோடியைப் போய்

**'தங்கமே, எங்கள் சிங்கமே, எங்கள் குலம் காக்க வந்த மன்னனே.'** எண்டெல்லாம் புளுகித்தள்ளியிருக்கிறார்.

**'உங்களைச் சந்திக்க ஆவலாக இருக்கிறம். கெதியாக் கூப்பிடுங்கோ'** எண்டு கூட்டமைப்பு மோடியிட்ட கோரிக்கையைக் கூட விட்டிருக்கு.

**'மோடி வந்திட்டார். இனி 'மகிந்த கொம்பனி' வாலாட்டேலாது'** எண்ட றேஞ்சில சில இணையத்தளங்களும் சில பத்திரிகைகளும் சனங்களாகிய எங்களுக்கு அல்வா குடுக்க வெளிக்கிட்டிருக்குதுகள்.

**'இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைத் தனியாகக் கையாளுறதுக்கு எண்டு ஒரு விசேட ஆளை நியமிக்கிறார் மோடி'** எண்டு மோந்து பார்த்து ஒரு செய்தியை **யாழ்ப்பாணத்தில இருந்து உள்வீட்டுச் சாங்கதிகளை - சமையலறை, படுக்கையறை வரை போய் விவகாரங்களை அறியிற இணையத்தளம்** வெளியிட்டிருக்கு.

**'வந்திருக்கிறார் மோடி. அவர் வைச்சிருக்கிறார் சின்னத்தாடி. அரசியல்ல அவர் ஒரு கில்லாடி. அவருக்கு நான் காட்டுவேன் தமிழீழச் சீடி. அவரிட்ட வரத்தான் வேணும் மகிந்த, நாடி. அப்ப பாருங்க நம்மட துடிப்பை நாடி'** எண்ட மாதிரி வைகோ அன்ட் சீமான் கொம்பனி கலாய்க்கின்றன.

**இப்பிடியே ஆளாளுக்கு மோடியை வைச்சுக் காதில பூவை வைக்கிறாங்கள்.**

இப்பிடித்தான் முந்தி இந்தியச் சிறப்புத் தூதுவர்கள் பார்த்தசாரதி, ஜி.வெங்கடேஸ்வரன்ல தொடங்கி, ஜே.என். டிக்ஸித், நோர்வேத்தூதர் எரிக் சொல்கெய்ம், யப்பானியத் தூதர் யசூஸி அகாஸி, நவநீதம்பிள்ளை அம்மா எண்டு வந்து இப்ப மோடியில நிற்குது.

இடையில பிரிட்டிஸ் பிரதமர் டேவிற் கமரூன், அமெரிக்க ராஜாங்கச் செயலாளர்கள், அவை, இவை எண்டு தெருவால வழியால போற வாற எல்லாரிட்டயும் தமிழீழப்பிலாக் கணத்தை – ஒப்பாரி வைச்சதெல்லாம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்தக் காட்சிகள் எல்லாம் நினைவுக்கு வந்தால் நீங்கள் கொஞ்சம் கெட்டிக்காரர். விவரம் அறிஞ்ச ஆள்.

**இதையெல்லாம் மறந்திட்டு, இப்ப புதிசா 'மோடி ரசம்' குடிக்க விரும்பினியள் எண்டால் இது ஒரு பாவக்காயப்பேதி எண்டதை இன்னும் கொஞ்ச நாள்போகத் தெரிஞ்சு கொள்ளுவியள்.**

ஏனெண்டால், முப்பது வருசமாக இந்த 'ட்ராமா' நடந்து கொண்டிருக்கு. அவன் வாறான், இவன் வாறான், அந்தா வருது, இந்தா வருது எண்டு கண்கட்டு வித்தைகளைக் காட்டிக்கொண்டிருக்கிற விளையாட்டுக்கும் அம்பது அறுவது வருசமாகீட்டுது. இப்பவும் அதே பழைய விளையாட்டைத்தான் காட்டிறாங்கள் எண்டால்...

சின்னப்பிள்ளையளுக்கே இப்ப அம்மம்மாக்குழலைக் குடுக்கேலாது. தோடம்பழ இனிப்பையோ பல்லிமுட்டாசையோ அதுகள் வாங்கத் தயாரில்லை. ஆனால், அரசியல்லை இன்னும் பல்லி மிட்டாய்தான் ருஷிகரமான சரக்காயிருக்கு.

முப்பது வருசமாக நடந்த போரில எவ்வளவோ அப்பாவிச்சனங்களும் நல்ல மனிசரும் செத்துப் போயிட்டுதுகள். சனங்களுக்கு விசுவாசமான தலைவர்களும் போய்ச்சேர்ந்திட்டினம்.

லட்சக்கணக்கில விழுந்து வெடிச்ச ஷெல்லில இந்த மோ (ச) டிக்காரருக்கு ஒரு சேதமும் வரேல்ல எண்டதுதான் என்ரை கவலை.

இதுக்குள்ள சம்பந்தன் எழுதின கடிதத்தில என்ன சொல்லிறார் எண்டதையும் ஒருக்கால் பாருங்கோ...

**'தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவோம் என சர்வதேச சமூகத்திற்கும், இந்தியாவுக்கும் ஏற்கெனவே பல தடவைகள் தான் வழங்கிய உறுதிமொழியை இலங்கை அரசு நிறைவு செய்யவேயில்லை'** எண்டு.

ஐயா.... இலங்கை அரசு ஒண்டும் நீதியான அரசில்லைத்தான். அது உலகறிஞ்ச சங்கதி. இனவாத அரசு, தரகு முதலாளித்துவ அரசு எண்டுதான் இலங்கையின்ரை ஆட்சி நடந்து கொண்டிருக்கு.

இதில ஒரு புதினமும் இல்லை.

ஆனால், **நீங்கள் உங்கட சொந்தச் சனத்துக்கு - உங்களுக்கு வாக்குப்போட்டு நீங்கள் சம்பளமும் கிம்பளமும் எடுக்க வழி பண்ணின சனத்துக்கு, விசுவாசமாக - உருப்படியாக என்னத்தைச் செய்திருக்கிறியள்?**

அந்தச் சனங்களுக்கு **நீங்கள் பம்மாத்து, ஏமாத்து. சுத்துமாத்து எண்டெல்லாம் செய்யிறதை முதல்ல நிப்பாட்டிறதைப்பற்றி ஒருக்கால் யோசியுங்கோ..**

சத்தியமாத் தெரியாமல்தான் கேட்கிறன், மோடியோ, தமிழ்நாட்டில இருக்கிற லேடியோ... இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு வழி பண்ணுவினம் எண்டு நீங்கள் நம்பிறியளா...

அப்பிடியெண்டால் அதை எப்பிடி நம்பிறியள் எண்டு ஒருக்காச் சொல்லுங்கோ...

உன் அண்டை வீட்டுக்காரனை நேசிப்பதுபோல
உன் விரோதியையும் நேசி - மாத்யூ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## குழந்தைகளைக் கவனியுங்கள்!

உடல் எடை அதிகரிப்பது பொதுவான பிரச்சினையாக இருந்தாலும், குண்டான குழந்தைகள் அதிகம் கவனிக்கப்பட வேண்டியவர்களாகிறார்கள். இன்று குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் வருகிறதென்றால் அதற்கான காரணங்களில் ஒன்று, அதிக எடை என்கிறார்கள் மருத்துவர்கள்.

அதிக எடையுள்ள சிறுவர், சிறுமிகளைப் பிற மாணவர்கள் கேலி செய்கிறார்கள். இதனால் மன அழுத்தம். விளையாடச் சென்றாலும் அவர்களைப் பிறர் விளையாட்டில் சேர்த்துக் கொள்வதில்லை. பிறரால் ஒதுக்கப்படுவதாக உணர்கிறார்கள்.

அதிக எடை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பரம்பரையிலிருந்தும் இது வரலாம். இந்தப் பரம்பரை அதிக உடல் எடைப் பிரச்சினையைத் தவிர்க்க முடியாது. ஆனால், உடல் உழைப்பு குறைவு, தற்போதைய உணவுமுறை ஆகியவற்றால் வரக்கூடிய அதிக உடல் எடையை நாம் தடுக்க முடியும்.

பாடசாலைக்கு இன்று பெரும்பாலும் குழந்தைகள் நடந்து செல்வதில்லை. வீட்டு வாசலில் வந்து நிற்கும் பள்ளிக்கூட வாகனங்கள். பஸ்கள். பெரும்பாலான பாடசாலைகளில் விளையாட்டு மைதானம் இல்லை. அப்படியே இருந்தாலும் உடற்பயிற்சி வகுப்புகளைத் தவிர, பிற நேரங்களில் பிள்ளைகள் விளையாடுவது இல்லை. படிப்பில் அதிக புள்ளிகள் எடுப்பதற்கே அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்.

பிள்ளைகள் வீட்டுக்கு வந்தாலும், அவர்களுடைய எல்லா வேலைகளையும் பெற்றோரே செய்து தருகிறார்கள். பாடசாலையால் வந்ததும் ரியூஷன். அதைவிட ஏதேதோ வகுப்புகள். விளையாட்டு என்றால் தெருவில் பிற பிள்ளைகளுடன் ஓடியாடி விளையாடுவதல்ல. கம்ப்யூட்டர், வீடியோ, செல்போன் விளையாட்டுகள் தான். இருந்த இடத்திலேயே குழந்தைகள் ரென்ஷனாகிக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோரைப் பார்த்துத்தான் குழந்தைகள் எதையுமே கற்றுக் கொள்கிறார்கள். பெரும்பாலான பெற்றோர் உடற்பயிற்சி என்றால் என்ன விலை என்று கேட்பவர்கள். காலையில் எழுந்து நடைப் பயிற்சி செய்யும் பெற்றோரும் குழந்தைகளை அழைத்துச் செல்வதில்லை.

சில வீடுகளில் சாப்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். நிறைய நொறுக்குத் தீனிகளை வீட்டுக்கு வாங்கி வருவார்கள். எண்ணெய்யில் பொரித்தவை, பைக்கெற்றில் அடைக்கப்பட்ட உப்பும், காரமும் உள்ள தின்பண்டங்கள், வித விதமான ஐஸ் கிறீம்களால் குழந்தைகளை மூழ்கடிப்பார்கள்.

போதாக்குறைக்கு தொலைக்காட்சி விளம்பரங்களில் வருகின்ற தின்பண்டங்களை வாங்கித் தரும்படியும் குழந்தைகள் அடம் பிடிப்பார்கள். இவையெல்லாம் அதிக உடல் எடைக்குக் காரணங்கள்.

அதுபோல குளிர்பானங்களை அருந்துவது இப்போது அதிகமாகி உள்ளது. ஒரு போத்தல் குளிர்பானத்தில் 300 கலோரி உள்ளது. இந்த கலோரி உடலில் சேர்ந்து காபோவைதரேற்றாக, வெல்லமாக, கொழுப்பாக மாறி உடல் எடையை அதிகரிக்கச் செய்கிறது.

இந்த 300 கலோரியை உடலில் இருந்து வெளியேற்ற வேண்டுமானால், ஒரு மணி நேரம் ஓட வேண்டும். அந்த அளவுக்கு உடல் உழைப்புக்கு நாம் நேரம் ஒதுக்குவதில்லை.

மேலும் குளிர்பானங்களில் உள்ளது வெற்று கலோரி. அதில் புரதச்சத்து இல்லை. இரும்புச் சத்து இல்லை. இவ்வாறு வெற்று கலோரி உள்ள நிறைய இனிப்புகள், தின்பண்டங்களைத்தான் நாம் அதிகம் விரும்பி உண்கிறோம். குழந்தைகளுக்கும் பழக்குகிறோம்.

நமது உணவு முறை, பழக்க வழக்கங்கள், வாழ்க்கைமுறை இவற்றில் மாற்றங்களைச் செய்தால்தான் அதிக உடல் எடையைக் குறைக்க முடியும். வாழ்க்கையை இலகுபடுத்திக்கொள்ள முடியும்.

- ஆசிரியர்.

# முஸ்லிம்களை மடக்கும் வியூகத்திற்கு ஒருபோதும் உடன்படமாட்டோம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சூளுரை

(கொழும்பு)

எந்தத் தேர்தல் வந்தாலும் முஸ்லிம் காங்கிரஸை எப்படி மடக்குவது என்கின்ற வியூகங்கள் பல்வேறு தரப்பினர்களினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த வியூகம் குறித்த சரியான உடன்பாடு இல்லாமல் யாரோடும் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுவைத்துக் கொள்ளாது என்கின்ற விடயத்தில் முஸ்லிம் மக்கள் தெளிவான நம்பிக்கையோடு இருக்க வேண்டுமென அக்கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற அபிவிருத்தி முப்பெரும் விழாவினைத் தொடர்ந்து சம்மாந்துறை பிரதான வீதியில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையிலே,

இன்று அரசின் சில பங்காளிக் கட்சிகள், அரசாங்கத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறப்போவதான ஒரு படத்தினைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்ற வேண்டும் என்பதில் சில பேருக்கு மிக முக்கியமான அவசரமும் அவசியமாக இருப்பதால்தான் ஊடகங்களில் செய்திகளை வெளியிடுகின்றார்கள்.

ஆட்சித் தலைமையோடு முஸ்லிம் காங்கிரஸ் முரண்பட்டுக்கொள்வது என்பது இன்று எதிரணியில் உள்ள சில இடங்களில் எதிர்பார்புக்களை கூட்டியிருக்கலாம். ஆனால் எதிரணியும் தன்னுடைய அரசியலை இன்னும் சரியாக அமைத்துக் கொள்வதற்கு தடுமாறிக்கொண்டிருக்கின்ற நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மிக நிதானமாகத்தான் செயற்படவேண்டியுள்ளது.

எந்தத் தேர்தல் வந்தாலும் முஸ்லிம் காங்கிரஸின் பலம் என்பது இப்போதைக்கு 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைகளிலும், 7 கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கைகளிலும்தான் இருந்துகொண்டிருக்கின்றது. இந்த அந்தஸ்தை வீணடிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாடுகளில் இருக்கின்ற புலம்பெயர்ந்த தமிழர்களுடைய அழுத்தத்தின் ஊடாக ஏதாவது தொன்றை அடைந்துகொள்ளலாம் என்கின்ற எதிர்பார்பு ஒரு சிலருக்கு இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலே அதிகப் பெரும்பான்மையானோர் வெளிநாடுகளிலே கோசம் போடுகின்ற புலம்பெயர்ந்தவர்களுடைய எல்லா விடயங்களையும் செவிசாய்க்கத் தயாராகவில்லை என்பதனைக் காண முடிகிறது. இந்தச் சூழலிலேதான் அரசாங்கம் அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்கின்ற விடயத்தில் நாட்டத்தோடு செயற்பட்டு வருகின்றது. எதிர்க்கட்சிகள் சிந்திக்கின்ற மாதிரி அசைக்க முடியாத அரசியல் சக்தியாக உள்ள தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஒரு தனி மனிதரை அல்ல பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்றார்.

# காய்ச்சலால் பீடிக்கப்பட்டோருக்கு இன்று முதல் விசேட பரிசோதனை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவும் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் காய்ச்சல் தொடர்பில் சிகிச்சை பெற வருவோருக்கு தனியான பரிசோதனைகளை மேற்கொள்ள விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவ டிக்கை முன்னெடுத்துள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் பாலித மஹீ பால தெரிவித்தார்.

இதற்கமைய நோயாளர்களுக்கான குருதி பரிசோதனை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும்.

டெங்குக் காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கு பொதுமக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமது வீட்டின் சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பது, தேவையற்ற விதத்தில் நீர் தேங்கும் இடங்களை இல்லாதொழிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, டெங்குக் காய்ச்சல் பரவும் 35 சுகாதார பரிசோதகர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் சுமார் 15 சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு காய்ச்சல் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு பரவும் பகுதிகளில் இரசாயன வாயுக்களை விசுறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# துரையப்பா விளையாட்டரங்கில் 'பட்டத்திருவிழா' நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பட்டத் திருவிழா 2014 என்ற மகுடத்தின் கீழ் பட்டம் விடும் திருவிழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பட்டம் கட்டுதல் அவற்றை அலங்கரித்தல் மற்றும் அவற்றை காற்றில் பறக்க விடல் என்பன மிகவும் திறன்மிகு செய்முறையாகும். அத்துடன் மாணவர்களின் மற்றும் இளைஞர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சியை தூண்டும் ஒரு கருவியாகவும் அமைந்துள்ள இந்த விழாவானது எதிர்வரும் 22 ஆம் திகதி காலை தொடக்கம மாலை வரை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலும் அதன் சுற்றாடலும் நடைபெறும் இந் நிகழ்வு இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டதாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தினம் காலையில் பட்டம் கட்டுவதற்கான பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் பட்டம் கட்டுவதற்கான பயிற்சிகள் பட்டம் கட்டும் நிபுணத்துவம் வாய்ந்த கலைஞர்களால் பயிற்சி அழிக்கப்படும் இத்துறையில் ஆர்வமுடையோர் கலந்துகொள்ளலாம்.

மாலை 100 இற்கு மேற்பட்ட வண்ணப் பட்டங்கள் பல்வேறு உள்ளூர் மற்றும்வெளியூர் நிபுணர்களால் உருவாக்கப்பட்ட பட்டங்கள் பறக்கவிடப்படும்.

ஆர்வமுடைய அனைவரையும் பங்குபற்றி பயனடையுமாறு ஆளுநர் செயலகம் கேட்டுள்ளது.

## கிராமசேவகரின் பணிக்கு இடையூறு; தாயும், மகனும் விளக்கமறியல்

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் கிராம அலுவலர் பணிக்கு இடையூறு விளைவித்த தாயும் மகனும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா இறம்பைக்குளம் பகுதியில், பணியில் ஈடுபட்டிருந்த கிராம சேவகரையும் அவருக்கு உதவியாக பணியாற்றிக்கொண்டிருந்த ஒருவரையும் பணியை முன்னெடுக்க முடியாதவாறு அக் கிராமத்தைச் சேர்ந்த தாயொருவரும் அவரது மகனும் இணைந்து இடையூறு விளைவித்தனர் என, வவுனியா பொலிஸில் கடந்த வியாழக்கிழமை கிராம அலுவலரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள்

வே. அர்ச்சுனன்

75



**இன்றைக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் ஆலோசனை வழங்கும் ஜாம்பவான்களாக காட்டிக் கொள்கின்ற சில தமிழ் ஊடகங்கள் ஏன் விடுதலைப்புலி எழிலனின் முட்டாள்தனமான மாவிலாறு நடவடிக்கை தொடர்பில் சரியான வியாக்கியானங்களைக் கொடுக்காமல் அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தி செய்திகளை வெளியிட்டார்கள்? யாழ்ப்பாணத்தின் ஊடக ஜாம்பவான்களாக இருந்துகொண்டு இந்திய உளவு அமைப்புகளையும் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ஒருசேரக் கையாண்டு காத்தாடி விட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த விடயங்கள் விளங்காத ஒன்றாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஒட்டு மொத்தத்தில் புலிகளை அழிக்கவேண்டுமென்பதில் இவர்களும் குறியாக இருந்திருக்கிறார்கள் என்பதே வெளிப்படையாக புலனாகிறது.**

இலங்கையைக் காலத்திற்குக் காலம் மாறிமாறி ஆட்சியாளர்கள் ஆட்சி செய்த போதும் 30 ஆண்டு காலம் வடக்கில் நீடித்துவந்த போரை முடிக்கும் வேலைத்திட்டத்தை மிக கச்சிதமாக செய்துமுடித்தவர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே. இதனை வெளிப்படையாகக் கூறுவதில் எந்தவொரு கருத்து முரண்பாடும் இருக்காது என நினைக்கின்றேன்.

சர்வதேச அழுத்தங்கள் ஒருபுறம் சர்வதேச ஆதரவுகள் மறுபுறம் என இரண்டு பக்க காய்நகர்த்தல்களையும் யுத்தம் இடம்பெற்ற போது தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஜனாதிபதி, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சர்வதேச நாடுகளிடமிருந்து ஆயுத ஒத்துழைப்பு முதல் புலனாய்வுத் தகவல்களை பெற்றுக் கொள்வதிலிருந்து, எந்தெந்த வகையில் உதவிகளைப் பெறவேண்டுமோ அவ்வாறு பெற்று யுத்தத்தை முடிப்பதில் அல்லது விடுதலைப் புலிகளை முள்ளி வாய்க்கால் வரை இழுத்துச்சென்று அழித்ததில் வெற்றிபெற்றார்.

அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் போர்த் தளபாடங்கள் உட்பட புலனாய்வுத் தகவல்களையும் இலங்கைக்கு வழங்கிவந்தன. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம்மீது அல்கொய்தா நடத்திய பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சர்வதேச ஒழுங்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கு சரியான ஒரு தெளிவை ஏற்படுத்த தமிழ் ஊடகங்கள் தவறியிருந்தன.

குறிப்பாக கரும்புலித் தாக்குதல்கள் தற்கொலைத் தாக்குதல்கள் குண்டுவெடிப்புகள் என்பனவற்றை முற்றுமுழுதாக சர்வதேசம் பயங்கரவாதமாகவே பார்த்தது. ஆனால் இலங்கையில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு தாக்குதல்களையும் குறிப்பாக தற்கொலைத் தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள், கிளைமோர் தாக்குதல்கள் என்பனவற்றை தமிழ் ஊடகங்கள் புகழ்ந்து தள்ளியதுடன் அதனால் ஏற்படப் போகின்ற சாதக பாதக விளைவுகள் தொடர்பில் எந்தவொரு ஊடகமும் விமர்சிக்கவோ, அல்லது கருத்துச் சொல்லவோ முன்வரவில்லை.

மாறாக இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகளை மேலும் தூண்டும் விதத்திலேயே தங்களது கருத்துகளை ஊடகங்கள் வெளிப்படுத்தி வந்தன. இது விடுதலைப் புலிகளின் முடிவிற்கு ஏதோ ஒரு விதத்தில் வழியை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த அன்ரன் பாலசிங்கம் மறைந்தமை விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ஒழுங்குகள் புதிய இராஜதந்திர அணுகுமுறைகள் என்பன தொடர்பில் அடுத்த கட்டம் சிந்திப்பதற்கு வழி ஏற்படுத்தி இருக்கவில்லை. இதனால் தாங்கள் செய்கின்ற காரியங்கள் அல்லது தங்களால் மேற்கொள்ளப்படுகின்ற இராணுவ நகர்வுகள் அனைத்தும் சரியென்றே புலிகளுக்குப்பட்டது. இது தொடர்பான விழிப்புணர்வையோ அல்லது விமர்சனக் கருத்தையோ தமிழ் ஊடகங்கள் எவையும் முன்வைக்கவில்லை.

இறுதியாக தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் அனந்தி சசிதரனின் கணவர் எழிலன் திருகோணமலையில் மாவிலாறு தண்ணீரை திறந்துவிடாமல் மூடியமை ஒரு வீரசாதனையாகவே தமிழ் ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டது. ஆனால் இந்த நடவடிக்கை இராஜதந்திர ரீதியிலும் மனிதாபிமான ரீதியிலும் பெரும் பிழையாகவே சர்வதேசத்தால் பார்க்கப்பட்டது.

இந்த நடவடிக்கை தொடர்பில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தபோதிலும் அன்ரன் பாலசிங்கம் போன்று வெளிப்படையாக கருத்துகளை சொல்லக்கூடிய தகுதி அல்லது திறமை இவர்களிடம் இருக்கவில்லை.

இன்றைக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் ஆலோசனை வழங்குவதாக அல்லது தங்களை அரசியல் ஜாம்பவான்களாக காட்டிக் கொள்கின்ற ஒரு சில தமிழ் ஊடகங்கள் ஏன் இக்காலப் பகுதியில் மாவிலாறு நடவடிக்கையை பிழை என்று வர்ணித்து அது தொடர்பில் சரியான வியாக்கியானங்களைக் கொடுத்து செய்திகளை வெளியிடாமல் அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தி செய்திகளை வெளியிட்டார்கள்?

**வீரமாக முன்னேறுகிறோம் என்றே உசுப்பேத்தல்களுடன் மக்களை ஏமாற்றி பேரழிவு வரை தள்ளிச்சென்ற இந்தத் தமிழ் ஊடகங்கள், எல்லாம் முடிந்து, போரின் பயனற்ற தன்மையை மக்கள் உணர்ந்து நொந்து கெட்டுச் சோர்ந்து வந்த பிறகும், தங்களது வீர முழக்கங்களையும், பசப்பு மொழிகளையும் வேறு மார்க்கத்தில் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான அடுத்த கட்டத்திற்கு தற்போது தயாராகிவிட்டன.**

யாழ்ப்பாணத்தின் ஊடக ஜாம்பவான்களாக இருந்துகொண்டு இந்திய உளவு அமைப்புகளையும் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் ஒருசேரக் கையாண்டு காத்தாடி விட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு இந்த விடயங்கள் விளங்காத ஒன்றாக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஒட்டு மொத்தத்தில் புலிகளை அழிக்கவேண்டுமென்பதில் இவர்களும் குறியாக இருந்திருக்கிறார்கள் என்பதே வெளிப்படையாக புலனாகிறது.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதற்கு பல காரணங்கள் சொல்லப்படுவதுண்டு. கருணாவின் பிரிவு விடுதலைப் புலிகளை கிழக்கு மாகாணத்தில் முழுமையாக பலம் இழக்கச் செய்தது. இதனை எந்தவொரு தமிழ் ஊடகமும் சுட்டிக்காட்ட முன்வரவில்லை. மாறாக தனிமனிதராக நின்று கருணாவால் எதனையும் சாதிக்கமுடியாது என்ற சாரப்படவே தமிழ் ஊடகங்கள் புலிகளை உசுப்பேத்தும் செய்திகளை வெளியிட்டு வந்தனர்.

அடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதல் தளபதிகளில் மிக முக்கியமானவராக இருந்த பால்ராஜின் இழப்பு புலிகளைப் பொறுத்தவரையில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகவே இருந்தது. சாமாதான காலத்தில் பால்ராஜை பார்க்கவேண்டுமென பல தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இராணுவத் தளபதிகள் கூட ஆசைப்பட்டதுண்டு. இதைவிட அரச படைகளின் இராணுவத் தளபதியாக இருந்த சரத்பொன்சேகா கூட இராணுவ ரீதியிலான மதிப்பீடு ஒன்றை வைத்திருந்தார்.

ஆனால் பால்ராஜ் இறந்ததின் பின்னர் விடுதலைப் புலிகளை இலகுவாக தோற்கடிக்கலாம் என்ற மதிப்பீட்டை அரச படையினர் அடைந்துவிட்டது குறித்து தமிழ் ஊடகங்கள் தெளிவான விளக்கங்களை தங்களிடத்தில் வைத்திருந்த பொழுதிலும் உண்மையை எழுதத் துணியவில்லை. மாறாக பால்ராஜ் வளர்த்த ஆயிரம் ஆயிரம் போராளிகள் புதிய தந்திரோபாயங்களை வகுத்து புதிய அணுகுமுறையில் களமுனையை திறம்பட வழிநடத்துவார்கள்; வெற்றி நிச்சயம் என்ற சாரப்படவே தமிழ் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுத் தள்ளினர்.

இதன்பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த சு.ப தமிழ்ச்செல்வன் அரசபடைகளின் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைப் படையினர் தமிழ்ச்செல்வனை இலக்குவைத்து குறிதவறாமல் தாக்குதல் நடத்துகின்ற அளவிற்கு பெற்றிருந்த துல்லியமான புலனாய்வுத் தகவல்கள் பற்றி எந்தவொரு தமிழ் ஊடகமும் மதிப்பீடு செய்து அது தொடர்பான தகவல்களை அல்லது எதிர்காலத்தின் சாதக பாதகம் தொடர்பில் விமர்சனம் செய்ய முன்வரவில்லை.

ஒட்டுமொத்தத்தில், தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகள் இராணுவ செயற்பாடுகள் வெளிவிவகார இராஜதந்திர செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளிலும் இறுதிக் கட்டங்களில் ஓட்டை விழுந்த போதிலும் எந்தவொரு கட்டமைப்பிலும் ஓட்டை விழவில்லை எல்லாம் சீராகவே இருக்கிறது. எல்லாம் வெற்றிகரமாக முடிக்கக் கூடிய கட்டத்திலேயே இருக்கின்றது என்ற புளுகு மூட்டையாகவே தமிழ் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வந்தன.

ஆனால் சரியான மதிப்பீட்டை மேற்கொண்டுவந்த அரச புலனாய்வு மையம் விடுதலைப் புலிகளை படையியல் ரீதியாகவும் மனோவியல் ரீதியாகவும் அழிப்பதில் வெற்றிகண்டு முள்ளிவாய்க்கால் முடிவு வரை புலிகளை இழுத்துச் சென்றனர். யுத்தத்தின் முடிவு கோரமாக இருந்த போதிலும் - இரண்டு தரப்பினராலும் யுத்த மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட போதிலும் - யுத்தம் என்பது முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

நிலைமைகள் முள்ளிவாய்க்கால் முடிவு வரை சென்றபோதும் கடைசி முடிவை எட்டுகின்ற நாள் வரைக்கும் விடுதலைப் புலிகள் திருப்பி அடிப்பார்கள் பெரிய அடி ஒன்றைக் கொடுப்பார்கள் என்ற தோரணையிலேயே தமிழ் ஊடகங்கள் இறுதிவரைக்கும் செய்திகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தனர்.

வீரமாக முன்னேறுகிறோம் என்றே உசுப்பேத்தல்களுடன் மக்களை ஏமாற்றி பேரழிவு வரை தள்ளிச் சென்ற இந்தத் தமிழ் ஊடகங்கள், எல்லாம் முடிந்து, போரின் பயனற்ற தன்மையை மக்கள் உணர்ந்து நொந்து கெட்டுச் சோர்ந்து வந்த பிறகும், தங்களது வீர முழக்கங்களையும், பசப்பு மொழிகளையும் வேறு மார்க்கத்தில் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான அடுத்த கட்டத்திற்கு தற்போது தயாராகிவிட்டன.

விடுதலைப் புலிகளை அழித்தது போன்று அடுத்த கட்டமாக தமிழ் ஊடகங்கள் யாரை அழிக்கத் தயாராகின்றன என்பதை தமிழ் மக்கள் நுணுக்கமாக ஆராய்ந்து தெரிந்துகொள்வதே, தங்களது எதிர்காலத்தை நல்லபடி அமைத்துக் கொள்வதற்குத் தேவையான மிக அவசியமான பட்டறிவாக இருக்கும்.

- முற்றும் -

# இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாமல் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண



நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும். தமிழ் மக்களை திருப்தி செய்தால் பயங்கர வாதம் மீளத் தலைதூக்க வாய்ப்பிலலை. வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் காத்திரமான முறையில் தீர்வுத் திட்டங்களை முனவைக்க வில்லை என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களின் மெய்யான அபிலாஷைகளை புரிந்து கொண்டு அரசாங்கம் செயற்படவில்லை. யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் யதார்த்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாத நிலைமை நீடித்து வருகிறது.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் சகல அதிகாரங்களையும் வழங்க வேண்டியதில்லை. படிப்படியாக கிரமமான முறையில் ஒவ்வொரு விடயமாக வழங்கப்பட முடியும் என்றார்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இம்மாதம் பொலிவியா பயணம்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென் அமெரிக்க நாடான பொலிவியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணம் இந்த மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

குழு 77 நாடுகளின் 50 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார்.

உலகின் மூன்றில் இரண்டு நாடுகள் அங்கம் வகிக்கும் குழு 77 நாடுகளில் 133 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது உணவு பாதுகாப்பு, பட்டினி உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

# விரிவுரையாளர் சேவை புறக்கணிப்பு நாளை திட்டமிட்டபடி நடைபெறும்

## விரிவுரையாளர் சங்க சம்மேளனம் அறிவிப்பு

நாளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்ட ஒரு நாள் அடையாள சேவைப்புறக்கணிப்பு நிச்சயமாக இடம்பெறும் என பல்கலைகழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

6 கோரிக்கைகளை முன் வைத்து முன் எடுக்கப்படவுள்ள இந்த சேவைப்புறக்கணிப்பு தொடர்பில், விடயத்திற்கு பொறுப்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அந்த சங்கத்தின் தலைவர் சந்ரகுப்த தேநுவர தெரிவித்துள்ளார்.

எனினும், அவர்கள் இவற்றுக்கு போதிய தீர்வினை வழங்கவில்லை.

இந்தநிலையில், திட்டமிட்டப்படி நாளை பல்கலைகழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தமது சேவைப்புபுறக்கணிப்பு போராட்டத்தை நடாத்தும் எனத் தெரிவித்துள்ளார்.

# நாட்டைப் பீடித்துள்ளது பொதுவேட்பாளர் காய்ச்சல்

## கூறுகிறார் சரத்பொன்சேகா



பொது வேட்பாளர் காய்ச்சல் நாட்டில் பரவ ஆரம்பித்துள்ளது. நாட்டில் தற்போது தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுப்பது தேர்தல்கள் ஆணையாளர் அல்லவென ஜனநாயக கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் சரத் பொன்சேகா இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் தற்போது தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுப்பது தேர்தல்கள் ஆணையாளர் அல்ல. அதன் காரணமாகவே நாம் அண்மைக் காலமாக மேடைகளில் ஒரு விடயத்தை கூறி வந்தோம். தேர்தல் ஆணையாளர் எனும் ஒரு வெருளி பொம்மை இருப்பதாக கூறினோம்.

அத்துடன் நாட்டின் ஆட்சியாளர்களின் சோதிடர்களும் இவ்வாறு திகதி நிர்ணயிக்கின்றனர். தற்போது பொது வேட்பாளர என்ற காய்ச்சல் நாட்டில் பரவ ஆரம்பித்துள்ளது. நாட்டில் காணப்பட்ட நிலமைகளைக் கருத்திற்கொண்டு கடந்த முறை பொது வேட்பாளர் நியமிக்கப்பட்டார்.

எனவே தற்போதும் எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொது வேட்பாளரை இறக்கினாலே இந்த ஆட்சியாளர்களை தோல் வியடையச் செய்ய முடியும்.

அவ்வாறு களமிறங்கும் நபர் சிறந்த திட்டத்துடன் களமிறங்க வேண்டும். ஏனென்றால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை வீட்டிற்கு அனுப்பினால் மாத்திரம் நாட்டு மக்களின் பசி தீரப்போவதில்லை என்றார்.

# அரசிலிருந்து விலகுவதற்கு எப்போதும் தயங்க மாட்டேன்

## மீண்டும் வலியுறுத்துகிறார் விமல் வீரவன்ச

தாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு உரிய பதில் வழங்கப்படாவிட்டால், அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு தயங்கப் போவதில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச மீண்டும் எச்சரித்துள்ளார்.தமது தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட யோசனையை விமல் வீரவன்ச அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தாம் யோசனையை அமைச்சர்களிடம் சமர்ப்பித்து பதில் கூறுவதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் யோசனையில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்ப்பார்க்க முடியாது. எனினும் குறிப்பிட்ட பல விடயங்களில் அரசாங்கம் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும். அதேவேளை புதிய இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் போலியான உறவை ஏற்படுத்திக்கொள்ள முனைகிறது என்றார்.

# மோடி இந்தியப் பிரதமரானதால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நன்மை



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நியமனமானது, இலங்கையின் பொருளாதாரத்திற்கு நன்மையை ஏற்படுத்தும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் சர்வதேச வர்த்தக சஞ்சிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் அரசியல் மாற்றமானது, புதிய தொழில் வாய்ப்புக்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.

இதன்மூலம் அந்நிய செலாவணி அதிகரிக்கும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# இன்று இறுதித் தீர்மானம்

பௌத்த சாசன அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விஷேட பொலிஸ் பிரிவைத் தொடர்ந்தும் முன் எடுத்துச்செல்வதா? இல்லையா என்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளது.

இந்தத் தீர்மானம் இன்று எட்டப்படவுள்ளதாக ராவனா பலய அமைப்பின் இணைப்பாளர் இத்தேகந்தே சத்தா திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இதற்கான கலந்துரையாடலில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பௌத்த சாசன அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகாரப் பகிர்வு யோசனையை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்

## கோருகிறது ஐக்கிய தேசியக் கட்சி



நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பிலான அதிகாரப் பகிர்வு குறித்த யோசனை களை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மாகாணசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்களை பகிர்வது அல்லது ஏனைய அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டங்கள் குறித்து அரசாங்கம் யோசனைத் திட்டமொன்றை முன் வைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டால் மட்டுமே அதற்கு ஆதரவளிக்க முடியும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு முன்னதாக அரசாங்கம் யோசனைத் திட்டமொன்றை முன் வைக்க வேண்டியது அவசியமாகின்றது.

அரசாங்கத்தின் தீர்வுத் திட்ட யோசனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த யோசனைத் திட்டத்திற்கு உள்ளீடுகளை வழங்க முடியும் என அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே இடத்தில் இணைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

சகல யோசனைகளும் முன் வைக்கப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

# இயலாமையை மறைக்க கதை கூறும் முதலமைச்சர்

வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தனது இயலாமையை மறைக்க பல்வேறு கதைகளை கூறி வருவதாக அந்த மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அத்துல விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துல விஜேசிங்க முதலமைச்சராக இருந்தபோது பெருமளவில் மேலதிக ஊழியர்களை மாகாண சபை நிறுவனங்களுக்கு நியமித்துள்ளதால் தான் பிரச்சினையில் மாட்டிக்கொண்டுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தமைக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

விஜேசிங்க மேலும் தெரிவிக்கையில்

தன் [illegible]ல் வேலைகளை செய்ய முடியாது போனால், நியமனம் ஒனறை வழங்கமுடியாது போனால் தனது இயலாமையை மறைக்க பலர் இப்படியான கதைகளைக் கூறுவார்கள் எனத் தெரிவித்தார்.

# அரசியல் பொருளாதார முறையில் மாற்றம் அவசியம் என்கிறார் ரணில்

நாட்டினுள், அரசியல் மற்றும் பொருளாதார முறைமைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

இவற்றில் குறைகள் காணப்படுகின்றன.

எனவே அவற்றில் தற்சமயம் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசியல்முறைமை, பொருளாதார முறைமை, சமூக முறைமை ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில், சபாநாயகர் சமல் ராஜபக்ச, பங்கேற்றிருந்தார்.

அங்கு உரையாற்றிய அவர், அரசியல் நடவடிக்கைகளில் அவசரப்படக்கூடாது என குறிப்பிட்டார்.

இது தொடர்பான அனுபவம் எங்களுக்கு உள்ளது

சமத்துவத்துடன் பயணிக்க வேண்டும், மக்களின் தேவைகளைக் கண்டறிய வேண்டும், நாட்டின் தேவைகள் கண்டறியப்படவேண்டும்.

சகல பக்கங்களிலும் தற்சமயம் குறைபாடுகள், தவறுகள் காணப்படுகின்றன. எனவே, வழங்கப்படும் கடமைகளை ஒவ்வொருவரும் உரிய வகையில் மேற்கொள்வார்களாயின், சிறந்த பயணத்தை முன் எடுக்க முடியும் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# புகையிலை சார்ந்த பொருட்கள் விற்பனை வெள்ளி, போயாதினங்களில் தவிர்க்க வேண்டும்

## யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

வெள்ளிக்கிழமை மற்றும் போயா தினங்களில் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதனை தவிர்ப்பதற்கு வணிகர்கழகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக புகையிலை ஒழிப்பு தின பேரணி நேற்றுமுன்தினம் யாழ்.நகரில் நடைபெற்றது. அதன்பின்னர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உலக புகையிலை ஒழிப்பு தின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

புகையிலை ஒழிப்பு தினமாகிய இன்று யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதை தடைசெய்யுமாறு வர்த்தகர்களிடம் சுகாதார திணைக்களத்தினால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட வர்த்தகர்கள் நேற்றுமுன்தினம் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதை தடைசெய்தனர். அவ்வாறு தடைசெய்த வர்த்தகர்களுக்கு வடமாகாண சுகாதார அமைச்சரின் கையொப்பத்துடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேவேளை, வெள்ளிக்கிழமைகளில் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வதை தவிர்ப்பதாக சாவகச்சேரி மற்றும் நெல்லியடி வர்த்தக சங்கங்கள் முன்வந்து, அந்த நடைமுறையினைப் பின்பற்றி வருகின்றார்கள்.

அதேமாதிரி யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய வர்த்தக சங்கங்களும் முன்வந்து வெள்ளி மற்றும் போயா தினங்களில் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதனை தவிர்ப்பதற்கு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், இச்செயற்பாட்டிற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களின் ஒத்துழைப்பு அவசியமென்றும் அனைத்து வர்த்தகர்களையும் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி புற்றுநோய்த் தாக்கத்தில் இருந்த விடுபட முன்வர வேண்டுமென்றும் தெரிவித்தார். (25)

# கொடியேற்றம் காணவந்தோம் எம்மிடியகற்ற வேண்டுமையா!

நீராவியடிப் பதியுறையும் நின்மலனே விநாயகனே!
ஊரார்கள் ஒன்றுகூட இன்றுனக்குக் கொடியேற்றம்!
வாராயோ எங்கள் முன்னே? வல்லபை கணபதியே! பெருநிதியே!
வேரோடு வினை களையும் விக்னேஸ்வரப் பெருமானே!
கூரான ஆயுதமாய் உன் கொம்பினையே கொண்டுநின்று!
பாராளும் பாண்டவரின் கதை எழுதிய கணபதியே!
தாராயோ நின் திருவருளைத் தரணிதனில் நாம் வாழ
தரிசனமே தந்தருள்வாய் கரிமுகனே சரணம் ஐயா!

சீரானவாழ் வருளும் சிங்கார வேலன் சகோதரனே!
சிறப்புடனே நாம் வாழ வரந்தருவாய் விநாயகனே!
நீராவியடி தன்னில் இன்று நின் கோயில் வலம்வந்தே
கொடியேற்றம் காண வந்தோம் எம்மிடியகற்ற வேண்டுமையா!
சூராதி சூரனான அசுரன் கஜமுகனைச் சங்கரித்தாய்!
சுகவாழ்வும் நிம்மதியும் நித்திரையும் தந்திடையா!
நாராயணன் கண்ணனின் நல்லதொரு மருமகனே!
நலமாக நாம் வாழ அருள்புரிவாய் நல்வாரணனே!

"சிவநெறிக் கலாநிதி"
இராசையா ஸ்ரீதரன்

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்றாகும்.

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 11 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் கொடியிறக்கமும் இடம்பெறும்.

# யாழ்.மாவட்டத்தில் அனைத்து இடங்களுக்கும் மின்சாரம்

## மின்சார சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அனைவருக்கும் மின்சாரம் எனும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் எதிர்வரும் டிசம்பர் மாத்திற்கு முன்னர் மின்சாரம் வழங்கப்படும் என யாழ்.மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மின்சாரசபையினரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 23 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும். மேலும் 23 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டும் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்பதாக மின்சாரம் வழங்கப்படும் என்றும தெரிவித்துள்ளனர். (பா)

# கற்றல், கற்பித்தல் உபகரணக் கண்காட்சி

(யாழ்.நிருபர்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியா சாலையில் கற்றல், கற்பித்தல் உபகரணக் கண்காட்சி கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்து மாணவர்களின் ஆக்கத்திறமைகளைப் பார்வையிட்டு வாழ்த்துத்தெரிவித்ததோடு அவர்கள் மென்மேலும் கலைகளில் வளர்ச்சிபெற வேண்டுமென ஆசிவழங்கினர்.

இக் கண்காட்சியினைப் பாடசாலை மாணவர்களும் அயற்பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களும் பார்வையிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# சமூக திலகம் விருது வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய புத்தாண்டு விழாவில் சமூகசேவையாளர்கள், கல்வியியாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் சமூக திலகம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பேராசிரியர், க.தேவராஜா சமூக சேவையாளர்களுக்கான 'சமூக திலகம்' விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இவ்விழாவில் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் சோமசுந்தரம் ஈழநேசன், திருநாவுக்கரசு சிறிஸ்கந்தராஜா, கிருஷ்ணபிள்ளை கந்தவேள், வேலாயுதம் குமாரசாமி, நாகேந்திரம் இலட்சுமணன், அப்துல்கமிட் இஸ்ஸலத்தில் லாபிர், கிரகறி கிறிஸ்தோபர், தவராசா கருணாகரன், வைத்தியர் சுப்பிரமணியம் சிறி விக்கினேஸ்வரா, வைத்தியர் சற்குருநாதன் மங்கையற்கரசி, பஞ்சாட்சரம் சிவபாஸ்கரன் ஆகிய பன்னிரண்டு சமூக சேவையாளர்கள் இவ்வருடம் சமூக திலகம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் புத்தாண்டு விழாவை சிறப்பாக நடாத்திவந்துள்ளன. இவ்விழாவில் மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டியை நடாத்துவதுடன் பரிசில்களும் வழங்கி சமூக திலகம் விருதையும் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (105)

# முரசின் இன்றைய பலன்



(02.06.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் வைகாசி மாதம் 19 ஆம் திகதி.
பஞ்சமி /சித்தம்.
பூச நட்சத்திரம் பி.இ 04.12 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம 07.22 - 08.52 வரை. சுபநேரம 11.52 - 01.22 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** நீண்டகாலம் பராமரிக்கப்பட்ட காணி ஆவணம் இன்மையால் கைவிட்டுச் செல்லும் பரிதாப நிலை, அரச சம்பந்தமான விடயங்கள் சாதகமான முடிவினைக் கொண்டுவரும்.

**ரிஷபம்** கிடைக்காது என்று ஏக்கத்ததைக் கொடுத்த நிலுவை கைக்கு வந்ததால் நிம்மதி, சாமர்த்தியமான பேச்சின் மூலம் முரண்பாடுகள் விலகி உங்கள் பக்கம் அதிர்ஷ்டக்காற்று வீசும்.

**மிதுனம்** வியாழ கோசரம் பாதகமாக இருப்பதினால் புதிய முயற்சியைக்கைவிடும் எண்ணம், முன்னேற்றத்திற்கு குறுக்காக நின்ற விடயங்கள் நீங்கியதால் பிரச்சினை அற்றுப்போதல்.

**கடகம்** மனக்கவலை நீங்கியதால் பிரச்சினையை எதிர்கொள்ளும் தைரியம் தோன்றல், இனிமையான பேச்சு, வாய்ச்சம்பிரதாயத்தால் காரியங்கள் எளிதில் கைகூடல்.

**சிம்மம்** பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் வரவிருந்ததுயர் விலகிச் செல்லல், துணைவியைப் பிரிந்து பணி நிமித்தம் வெளியில் தங்கநேரிடல்.

**கன்னி** பிறருக்கு உதவி செய்ய வெளிக்கிட்டு வீண் பழியைச் சுமக்க நேரிடல், தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய புதியதோர் யுக்தியை கையாளல்.

**துலாம்** கல்விப்புலத்தில் கூடிய கவனம் எடுக்க சபதமெடுத்தல், பிறரை மனம் மகிழச்செய்யும் விதத்தில் காரியங்களை உடனுக்குடன் மேற்கொள்ளல்.

**விருச்சிகம்** சமூகத்தில் உங்கள் செயற்பாட்டினால் கௌரவமும் அந்தஸ்த்தும் உயரும், அவசர முடிவினை எடுப்பதை இயன்ற வரை தவிர்க்கப்பாருங்கள்.

**தனுசு** நம்பியிருந்த காதல் திசைமாறிச் செல்ல நேரிடலாம் என்று பதகளிப்படைதல், மனக்குழப்பம் நீங்க தெளிவான முடிவினை மேற்கொண்டதால் காரியசித்தி ஏற்படல்.

**மகரம்** வியாபாரம் தொடர்பான பயணங்கள் இலாபத்தைத் தக்க வைக்கும் நிலை ஏற்படல், உதவி செய்ய முன்வராத உறவினருடன் மனத்தாங்கல் ஏற்படல்.

**கும்பம்** பங்குத் தொழிலில் பிரச்சினை அடிக்கடி ஏற்படுவதினால் தனித்தியங்க முற்படல், தம்பதியர் மனம்விட்டுப் பேசி முடிவெடுத்த காரியம் நன்மைபயத்தல்.

**மீனம்** பாதுகாப்பில் ஏற்பட்ட அசிரத்தையினால் வாகனம் திருட்டுப்போதல், புதியதோர் அறிமுகம் ஏற்பட்டவேளை நட்புப் பற்றி முடிவெடுக்க பின் நிற்றல்.

# நீலங்களின் சமர்; கிளிநொச்சி மத்தி பெரு வெற்றி






நீலங்களின் சமர் என வர்ணிக்கப் படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக் கெட் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி இனிங்ஸ் மற் றும் 24 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த 30,31ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத் திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித் தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி லகிதரனின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங் களைப் பெற்றது. இதில் ஜோறோம் 16, தர்சன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லகிதரன் மூன்று ஜெனற் பிரியன், நிலுக்ஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி நிலுக்ஷன், குக- நேசன், லகிதரன் ஆகியோர் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக மூன்று விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங் களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் நிலுக்ஷன் 62 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 82, குகநேசன், லகிதரன் ஆகியோர் தலா 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் இரண்டு, பிரதீப் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

114 ஓட்டங்கள் பின்னிலையில் இரண் டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி ஜெனற்பிரியனின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியதுடன் வேகமாகவும் விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது. இறுதியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக் களையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மயூரன் 27, கயூரன் 14 ஓட்டங் களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனற் பிரியன் ஐந்து, லகிதரன் இரண்டு, சசிதரன் ஒரு விக்கெட்டைக் கைப்பற் றினர். இதன் மூலம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி இனிங்ஸ் மற் றும் 24 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக நிலுக் ஷன், சிறந்த பந்து வீச்சாளராக ஜெனற் பிரியன், சகலதுறை வீரராக லகிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப் போட்டி நிகழ்வில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர் வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர் கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (93)

## இலஞ்சம் கொடுத்து வாய்ப்பு பெற்ற கட்டார்?

இலஞ்சம் கொடுத்தே எதிர்வரும் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால் பந்து போட்டியை நடாத்தும் வாய்ப்பை கட்டார் பெற்றுக்கொண்டதாக இங்கிலாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

உலக கோப்பை கால்பந்து போட்டி 4 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. கடைசியாக 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற் றது. 2014ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை வருகிற 12ஆம் திகதி பிரேசி லில் ஆரம்பமாகவுள்ளது. 2018ஆம் ஆண்டுக்கான போட்டி ரஷ்யாவிலும் 2022ஆம் ஆண்டுக்கான போட்டி கட் டாரிலும் நடைபெறவுள்ளது.

உலக கோப்பை போட்டியை நடாத்த கட்டார் தேர்வு செய்யப்பட்ட விதம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியது. பல ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதற்கிடையே கட்டார் நாட்டில் உலக கோப்பை போட்டியை நடாத்த ரூ.29 கோடி இலஞ்சம் கொடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகி இருக்கிறது. கட்டார் நாட்டு முன்னாள் கால்பந்து நிர்வாகி மொகமட் பின் ஹமான் தங்கள் நாட்டை தேர்வு செய்ய சர்வதேச கால்பந்து சம் மேளனத்துக்கு கொடுத்ததாக இங்கி லாந்து பத்திரிகை ஒன்று குற்றம் சாட்டி யுள்ளது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு சர்வதேச கால்பந்து சம்மேளன தலை- வர் பிளாட்டர் கூறும்போது, 2022 உலக கோப்பையை நடாத்த கட்டார் தேர்வு செய் யப்பட்டது மிகப்பெரிய தவறு என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இவானோவிச் வெளியேற்றம்


(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒன்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் நட்சத்திர வீராங்கனை அனா இவானோவிச் அதிர்ச்சித் தோல்வி யடைந்து வெளியேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் 7ஆவது நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் செக் குடியரசு வீராங்கனை லூசி சபரோவா 6-3, 6-3 என்ற நேர்செட்டில் சேர்பியா வீராங்கனை அனா இவானோ விச்சை சாய்த்து 4ஆவது சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 8 முறை சம் பியனும் உலக தர வரிசையில் முத லிடத்தில் இருப்பவருமான ரபெல் நடால் (ஸ்பெயின்) 6-2, 7-5, 6-2 என்ற நேர்செட்டில் லினார்டோ மேயரை (ஆர்ஜென்ரீனா) தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



நடாலை வீழ்த்த வேண்டும் என்ற கன வுடன் களமிறங்கினேன். அது முடிய வில்லை. அவர் சிறந்த வீரர் என தோல்வியின் பின் லினார்டோ ஊடக வியலாளர்களிடம் கருத்துத் தெரிவித் துள்ளார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டே சிறந்தது

டெஸ்ட் கிரிக்கெட்டே சிறந்தது. பெயர் வர வேண்டுமென்றால் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவது அவசியம் என இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

நிச்சயம் ஒரு இனிங்ஸ் உண்டு என்பது எனக்குத் தெரியும் ஆனால் அது எப்போது நிகழும் என்பதில்தான் சந்தேகம் இருந்தது. ஆனால் பிளே ஓப் சுற்றின் கடைசி ஆட்டத்தில் இந்த இனிங்ஸ் நிகழ்ந்தது உண்மையில் சிறப்பானது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த இனிங்ஸ் கைகூடியுள்ளது. நான் இந்திய அணியில் இல்லாதபோது உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களில் நான் சதம், இரட்டைச் சதம் என்று விளாசி மீண்டும் வருவேன் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அது நடைபெறவில்லை. நேரம் சரி யாக இல்லையெனில் எது செய்தாலும் ஒன்றும் நடக்காது. நான் சரியாகவே விளையாடினேன், ஆனாலும் ஓட்டங் கள் எடுக்க முடியவில்லை. இந்த இனிங்ஸை ஆடிய தினம் எனது தினம் என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?



எமிர் ஸ்பாகிக்

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## பொஸ்னியா சிறு பார்வை

பொஸ்னியா நாட்டின் மக்கள்தொகை 40 இலட்சம்.1992 இல் யுகோஸ்லேவியாவிலிருந்து பிரிந்து, 1998இல் முதல் தடவையாக உலக கிண்ண தகுதி காண் போட்டிகளில் பங்கேற்றது.

2014 இல் முதல் தடவையாக உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.தேசிய அணியில் 10 வருட அனுபவமுள்ள, 33 வயதான, நடு பின் கள வீரர் எமிர் ஸ்பாகிக் (Emir Spahic) அணிக்குத் தலைமை தாங்குகிறார். 2012 இலிருந்து, தேசிய அணிக்காக அதிக கோல்களைப் போட்டவர் (24 கோல்கள்) என்னும் சாதனையைக் கொண்டுள்ள, 28 வயது, முன் கள வீரர் எடின் ஜெகொ (Edin Dzeko) அணியின் முக்கிய புள்ளியாவார்.

எதிரணி மீதான தாக்குதலைத் திட்டமிடுவதுடன்,முன்னேறித் தாக்கக்கூடிய,24 வயது,மத்திய கள வீரர் மிரலம் ஜானிக் (Miralem Pjanic) பலநுட்பங்களைக் கொண்ட வீரராவார். 59 வயதான சவே சுசிக் (Safet Susic) அணியின் பயிற்சியாளராவார்.

Brasil 2014
FIFA WORLD CUP
கால்பந்து திருவிழா
இன்னும் 10 நாட்கள்



15 வயதுப் பிரிவு ஆண்கள் முதலாமிடம் பருத்தித்துறை கலட்டி ஆர்.சீ.சீ.எம்.எஸ்.



19 வயதுப் பெண்கள் முதலாமிடம் நெல்லியடி மத்திய கல்லூரி



15 வயதுப் பிரிவு ஆண்கள் இரண்டாமிடம் சில்லாலை ஆர்.சீ.ரீ.எம்.எஸ்.



19 வயதுப் பெண்கள் இரண்டாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்



15 வயதுப் பிரிவு ஆண்கள் மூன்றாமிடம் உருத்திரபுரம் சிவநகர் ஜீ.ரீ.எம்.எஸ்.



19 வயதுப் பெண்கள் மூன்றாமிடம் உருத்திரபுரம் சிவநகர் ஜீ.ரீ.எம்.எஸ்.




15 வயதுப் பிரிவு பெண்கள் இரண்டாமிடம்
பண்டத்தரிப்பு ஜெசிந்தா



15 வயதுப் பிரிவு பெண்கள் மூன்றாமிடம்
பருத்தித்துறை மெதடிஸ்



19 வயதுப் பிரிவு ஆண்கள் மூன்றாமிடம்
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவால் நடாத்தப்பட்டு வரும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிக்ளைக் காணலாம். 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையில் இப்போட்டி நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான குமித்தே வெற்றியீட்டிய வீர,வீராங்கனைகள் விபரம்

(வவுனியா)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண கராத்தேப் போட்டியில் குமித்தேயில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டியைத் தற்போது நடாத்தி வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான கராத்தேப் போட்டி நேற்று முன்தினம் வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. தனிக் காட்டாக் குழுக் காட்டா, குமித்தேப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் தனிக் காட்டா, குழுக் காட்டாப் போட்டிகளின் விபரம் நேற்று வெளியிடப்பட்டது. இந்நிலையில் குமித்தேப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு அண்களுக்கான குமித்தேப் போட்டியில் சென்.ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ரி. தனுஜன் முதலாமிடத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.சஞ்ஜீவன் இரண்டாமிடத்தையும், இணுவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ரிலுக்ஷன் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தேப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். முரளி முதலாமிடத்தையும் வல்வெட்டித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஈ. அலைக்குமரன் இரண்டாமிடத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி. தனுஜன் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தேப் போட்டியில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எச். என். றினாஸ் முதலாமிடத்தையும் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். செந்தூரன் இரண்டாமிடத்தையும் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம். முரளிதரன் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான குமித்தேப் போட்டியில் புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம். தியாகரசி முதலாமிடத்தையும் தும்பளை சிவபிரகாச மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பி. தேனுஜா இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கே. தமிழினி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான குமித்தேப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எஸ். சிந்துஜா முதலாமிடத்தையும் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பி. துவாரகா இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். பிரத்திகா மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான குமித்தேப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். தமிழ்மகள் முதலாமிடத்தையும் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எச். நர்மதா இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த என். சர்மிளா மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர். (12,93)



## மாகாணச் சம்பியன்

வடமாகாண வீரர்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த றஞ்சிதநாதன் றமேஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டார். வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண வீரர்களுக்கான குத்துச்சண்டைப் போட்டி நேற்று முன்தினம் முல்லைத்தீவில் சிலாவத்துறை கொன்வென்றில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் பலர் பங்குகொண்டனர்.

இறுதிப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த றஞ்சிதநாதன் றமேஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கே.பிரியந்தன் மோதினர். இதில் புள்ளிகள் அடிப்படையில் ரஞ்சிதநாதன் றமேஸ் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

சம்பியன் பட்டம் வென்ற றமேஸ் வடமராட்சி அல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர். 2010, 2011,2012,2013,2014 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாகவே வடமாகாண சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அத்துடன் 2012,2013 ஆகிய ஆண்டுகளில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் 3 ஆம் இடத்தை பெற்று வெண்கல பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (90)

# கான் திரைக் கொண்டாட்டம்:

## பாசிசத்துக்கு எதிராக உருவான விழா

- ஆர்.ஜெய்குமார் -

பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு சிறிய நகரான கான் நகரில் நடக்கும் இந்தத் திரைப்பட விழாவுக்கு இன்றைக்கு உலகமெங்கும் மிகப் பெரிய அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட ஒஸ்கார் விழாவுக்கு நிகராக கான் திரைப்பட விழா


GETTY IMAGES

உலக சினிமா ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களையும் பெற்றுள்ளது. இவ்வளவு பெரிய இந்த விழா உருவானதற்கு ஒரு முக்கியமான அரசியல் பின்னணி உள்ளது.

1932இல் முசோலினியின் இத்தாலியில் வெனிஸ் நகரத்தில் ஒரு திரைப்பட விழா தொடங்கப்பட்டது. இந்தத் திரைவிழா அந்தக் காலகட்டத்தில் மிகப் பெரிய திரை விழாவாகப் புகழ்பெற்றிருந்தது. வெனிஸ் திரைப்பட விழா விருது அந்நாளைய சினிமா கலைஞர்களின் கனவாக இருந்தது. இந்த விழாவில் பங்கேற்பதை மற்ற நாடுகள் கௌரவமாகக் கருதின. ஆனால் இந்த விழா பிரபலமடைந்த சில நாட்களில் நடுவர்கள், ஜேர்மானிய, இக்காலிய பாசிசக் கூட்டணி ஆதரவாளர்களுக்குச் சாதகமாகச் செயற்படத் தொடங்கினர்.

1938ஆம் ஆண்டு நடந்த விழாவில் பிரெஞ்ச் இயக்குனர் ழான் ரென்வாவின் படமான La Grande Illusion விழாவின் உயரிய விருதான முசோலினி கோப்பையைப் பெறும் என எதிர்பார்க்கப் பட்டது. இந்தப் படம் போருக்கு எதிரான கருத்துகளை முன்வைக்கும் படம். ஆனால் ஜேர்மனியப் படமான Olympia வுக்கும் இத்தாலியப் படமான Luciano Serra, Pilotஇற்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தப் படம் ஹிட்லரின் நாஜிப் படைகளின் வெற்றிகளைப் போற்றும் வகையில் எடுக்கப்பட்டது. இதற்குப் பின்னால் முசோலினியின் அழுத்தம் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

இந்த விருது அறிவிப்பு வெளியானதும் பிரான்ஸ் விழாவில் இருந்து வெளியேறியது. பிரான்ஸுக்கு ஆதரவாக இங்கிலாந்து, அமெரிக்க நடுவர்கள் ராஜினாமா செய்தனர். ஆனால் திரைப்பட விழாக் குழு அதற்கெல்லாம் செவி சாய்க்கவே இல்லை. La Grande Illusion படத்திற்கு இத்தாலியும், ஜேர்மனியும் தடைவிதித்தன.

இந்தக் காலகட்டத்தில் தான் பிரான்ஸைச் சேர்ந்த சினிமா ஆர்வலர்கள் சிலர், அரசியல் சார்பில்லாத ஒரு திரைப்பட விழா திரைப்பட வளர்ச்சிக்கு அவசியம் என நினைத்தனர். அப்படியான விழாவை பிரெஞ்ச் அரசாங்கமே நடத்த வேண்டும் என அரசிடம் கோரிக்கை வைத்தனர். ஆனால் முசோலினிக்குப் பயந்து பிரெஞ்ச் அரசு அந்தக் கோரிக்கையை உடனடியாகப் பரிசீலிக்கவில்லை.

ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளும் இக்கோரிக்கையை ஆதரித்தன. பிரெஞ்ச் சினிமாவின் முக்கியமான ஆளுமைகளும் கொடுத்த நெருக்கடியால் வேறு வழியில்லாமல் பிரெஞ்ச் அரசு அதற்குப் பச்சைக்கொடி காட்டியது. அதன் பிறகு விழா நடைபெறும் நகரமாக கான் தேர்ந்தெடுக்கப்பட்டது. முதல் விழா 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 1இல் தொடங்கி இன்று வரை நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1500இற்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்படுகின்றன. உலகின் மிகப் பெரிய திரைத் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு முழுக்க, முழுக்க கலைக்கெனத் தொடங்கப்பட்ட இந்த விழா, இன்று உலகின் திரை ஆர்வலர்களுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்துக்கொண்டிருக்கிறது.

# விஜய் டிவி தொகுப்பாளினி டிடி இற்கு ஜூனில் திருமணம்

சமீபத்தில் விஜய் டி.வியின் "டெலி அவார்ட்" நிகழ்ச்சியில் சிறந்த தொகுப்பாளினியாக விருது பெற்றவர் திவ்யதர்ஷினி (டிடி). அவர் தனது 5 வருட கால நண்பரான ஸ்ரீகாந்த் ரவிச்சந்திரனை திருமணம் முடிக்கவிருக்கிறார். ஜூன் இறுதியில் சென்னையில் திருமணம். ஸ்ரீகாந்த் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனனிடம் உதவியாளராக பணியாற்றியவர். விரைவில் படம் இயக்கப் போகிறார்.



"ஒரு வழியாக இரண்டு பேர் வீட்டிலும் உள்ள பெரியவங்களே பேசி எங்கள் திருமணத்தை முடிவு செய்துட்டாங்க. இத்தனை நாட்களாக என்னோட நண்பனாக இருந்த ஸ்ரீகாந்தை, "ஹாய் மாமா" என்றுதான் செல்லமாக கூப்பிடுவேன். அவ்ளோ ஜாலியான, புரிந்துணர்வுள்ள நபர். இப்போ என்னோட லைஃப் பாட்னராகவே ஆகிட்டார். ரொம்பவே சந்தோஷமா இருக்கு..." என்று மகிழ்ச்சி பொங்க கூறுகிறார், டிடி.

# குழந்தையின்மைப் பிரச்சினை இனி இல்லை!

- மருத்துவர் சங்கரி -

பொதுவாக ஒரு குடும்பத்தில் குழந்தையில்லை என்றால் அவர்களைச் சுற்றியுள்ள சுற்றமும், சொந்த பந்தமும், முதலில் அந்தப் பெண்ணைத்தான் குற்றம் சொல்வார்கள். பொதுவாக குழந்தையின்மைக்கு மருத்துவ ரீதியாக நிறைய காரணங்கள் இருக்கின்றன. இன்றைய சூழலில் ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுவது hormone imbalance பிரச்சினை.

அப்படியென்றால் கருப்பையில் பிரச்சினை, கரு முட்டை உருவாவதில் பிரச்சினை. இதனால் மாதவிடாய் நேரங்களில் சில பெண்களுக்கு 20 நாள்களுக்கு மேல் இரத்தப்பெருக்கு ஏற்படுவது அல்லது ஒருசில பெண்களுக்கு மாதம்தோறும் மாதவிடாய் ஏற்படாமல் இரண்டு மாதங்கள் அல்லது மூன்று மாதங்கள் கழித்து வருவது. இதில் இன்னும் பல வகை பிரச்சினைகளும் உண்டு. இதனால் ஒரு சில பெண்கள் உடல் பருத்து விடுகிறார்கள்.

ஓமோன்ஸ் இம்பலன்ஸ் உருவாவதற்கு முக்கிய காரணம் இன்றைய இளம் பெண்களின் நவீன வாழ்க்கை முறை, சரியான தூக்கமின்மை, சத்துள்ள உணவுகள் உண்ணாதது, தண்ணீர் நிறைய குடிப்பதில்லை, தினமும் உடற்பயிற்சி செய்வதில்லை, நிறைய துரித உணவைச் சாப்பிடுவது போன்றவைதான் இந்த ஓமோன் இம்பலன்ஸ்க்கு முக்கிய காரணம். இப்பொதெல்லாம் 20 - 25 வயதுக்குட்பட்ட பெண்கள் நிறைய பாதிக்கப்படுகிறார்கள். இதுவும் சில சமயங்களில் குழந்தையின்மை பிரச்சினைக்குக் காரணமாகிவிடுகிறது.



இதற்கு தற்போது நிறைய தீர்வுகள் வந்துவிட்டன. கருக்குழாய் அடைப்பு நீக்குதல், டெஸ்ட் ரியூப் பேபி, வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறுவது என பல முறைகள் வந்திருக்கின்றன.

அதேபோல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் கருமுட்டையை எடுத்து பதப்படுத்தி 23 ஆண்டுகள் வரை பாதுகாக்க முடியும். புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்து சரியான பிறகு பதப்படுத்தி வைத்துள்ள அவர்களது கருமுட்டையைப் பயன்படுத்தி அவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ளும் அளவிற்கு நவீன வசதிகள் இப்போது மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ளன.


அதனால் எந்த இளம் தம்பதியும் ஒன்றரை ஆண்டுகள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேல் குழந்தையில்லாமல் இருந்தால் உடனே மருத்துவரை அணுகி தக்க வைத்தியம் எடுத்துக்கொள்ள வேண்டும். கருப்பையே இல்லாமல் பிறந்திருந்தாலும் அல்லது ஏதாவது பிரச்சினைக்காக கருப்பை எடுத்திருந்தாலும்கூட அவர்களாலும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியும். அதனால் யாரும் குழந்தையில்லை என்று இனி வருத்தப்பட வேண்டியதில்லை.

ஒரு மருத்துவராக பெண்களுக்கு நான் சொல்லும் அறிவுரை என்னவென்றால், சரியான வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டும். குழந்தை பிறப்பை தள்ளிப்போடக் கூடாது. இதுவே சில சமயங்களில் குழந்தையின்மைக்கு காரணமாகிவிடும்.

இவற்றையெல்லாம் தாண்டி தற்போது மருத்துவத் துறையில் மேலும் ஒரு சாதனை நடைபெற்றுள்ளது. அது என்னவென்றால், சமீபத்தில் ஸ்வீடன் நாட்டில் ஒரு தாய் பிறவியிலேயே கருப்பை இல்லாமல் பிறந்த தன் மகளுக்கு, தனது கருப்பையை மாற்று அறுவைச் சிகிச்சையின் மூலம் அளித்துள்ளார். இதன் மூலம் அந்தப் பெண் கருவுற்றிருக்கிறாள். சாதனைதானே!

# எம்.ஜி.ஆர். குல்லா!

அடிமைப் பெண் படத்தின் படப்பிடிப்பு, 1968இல், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூரில் நடந்தது. அப்போது ராஜஸ்தான் முதல்வராக இருந்த மோகன்லால் சுகாதியா எம்.ஜி.ஆரையும், ஜானகி அம்மாளையும் அழைத்து, விருந்து கொடுத்தார். விருந்து முடிந்து கிளம்பிய எம்.ஜி.ஆர்., கையில், சிறிய பெட்டி ஒன்றை கொடுத்தார் சுகாதியா.



"இது என்ன பரிசு?" என்று கேட்டார், எம்.ஜி.ஆர்., "திறந்து பாருங்கள், தெரியும்..." என, சுகாதியா சொல்லவும், பெட்டியைத் திறந்து பார்த்த எம்.ஜி.ஆர்., அதனுள் இருந்த, "புஷ் குல்லா"வைக் கண்டதும், ஆச்சரியப்பட்டார். அதை சுகாதியா கையில் கொடுத்து, "நீங்களே என் தலையில் அணிவித்து விடுங்கள்..." என்றார்.

எம்.ஜி.ஆர்., தலையில் தொப்பியை அணிவித்த சுகாதியா, "இப்போது நீங்கள் முன்பை விட அழகாக இருக்கிறீர்கள்..." என்றார். அருகில் இருந்த ஜானகி அம்மாளும் அதை ஆமோதித்தார். பின், தொப்பி அணிந்து, பல கோணங்களில் தன்னைப்படம் எடுத்துப் பார்த்த எம்.ஜி.ஆர்., தொப்பி அணிவதை, வழக்கமாக்கிக் கொண்டார்.

('நம்மோடு வாழும் எம்.ஜி.ஆர்.,' நூலிலிருந்து.)

# ஜூன் மாதத்தில்...

கிரேக்கர்களின் இளமைத் தெய்வமான மெர்குரிக்கு ஜூனியஸ் என்ற பெயருண்டு. இதிலிருந்து வந்த பெயர்தான் "யூன்".

**யூனில் பிறந்தவர்கள்**

7, 1811 சேர்.ஜேம்ஸ் யங் சிம்சன் - குளோரபோர்ம் (மயக்க மருந்து) கண்டவர்.
16, 1923 டி.ஆர். மகாலிங்கம் - தமிழ்த் திரையுலக நடிகர், பாடகர்.
17, 1980 வீனஸ் வில்லியம்ஸ் - அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை.
19, 1945 ஆங் ஸான் சூகி - பர்மாவின் புரட்சிப் பெண்மணி.
19, 1947 சல்மான் ருஷ்டி - எழுத்தாளர்.
24, 1927 கவிஞர் கண்ணதாசன்.
27, 1880 ஹெலன் கெல்லர் - பிரெய்லி முறையைக் கண்டறிந்தவர்.
30, 1969 ஜெயசூர்யா - இலங்கை கிரிக்கெட் வீரர்.

**நினைவு நாள்கள்**

1, 1968 ஹெலன் கெல்லர்.
2, 1988 ரர்ஜ் கபூர் - ஹிந்தித் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்.
3, 1657 வில்லியம் ஹார்வி - இரத்த ஓட்டம் பற்றிக் கண்டறிந்த இங்கிலாந்துக்காரர்.
8, 1845 அன்ட்ரூ ஜாக்ஸன் - அமெரிக்காவின் 7 ஆவது ஜனாதிபதி.
26, 1827 சாமுவேல் கிராம்ப்டன் - நூல் நூற்கும் இயந்திரம் கண்டறிந்தவர்.
28, 1972 தண்டபாணி தேசிகர் - கர்நாடக இசைப் பாடகர்.



**சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்**

4 - டோங்கா
10 - போத்துக்கல்
12 - பிலிப்பைன்ஸ்
17 - ஐஸ்லாந்து
19 - குவைத்
25 - மொஸாம்பிக்
26 - மடகாஸ்கர்
29 - செஷெல்ஸ்.

**முக்கிய நிகழ்வுகள்**

2, 2003 ஐரோப்பிய நாடுகள் கூட்டாகத் தயாரித்த "மார்ஸ் எக்ஸ்பிரஸ்" என்ற விண்கலம் செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்காக விண்ணில் செலுத்தப்பட்டது.
3, 1989 சீனாவில் இராணுவம் மாணவர்களைத் தாக்கியதில் ஆயிரக்கணக்கானோர் இறந்தனர்.
8, 1975 ரஷ்யாவின் வெனேரா 9 - வெள்ளி கிரகத்துக்கு அனுப்பப்பட்டது.
10, 1940 இத்தாலி நாடு, இரண்டாம் உலகப் போரில் குதித்தது.
17, 1950 உலகில் முதல் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை அமெரிக்காவில் நடந்தது.

**முக்கிய தினங்கள்**

5 உலகச் சுற்றுச்சூழல் தினம்
8 பெருங்கடல் தினம்
12 குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்
14 இரத்ததானம் செய்வோர் தினம்
16 தந்தையர் தினம்
17 பாலைவனம் மற்றும் வறட்சியைக் கட்டுப்படுத்தும் தினம்
20 சர்வதேச அகதிகள் தினம்
21 உலக இசை தினம்
23 ஒலிம்பிக் தினம்
27 உலக நீரிழிவு தினம்

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர் 2

**- கமெலியா நாதானியேல் -**

பிரான்சிலுள்ள ஈழமுரசு ஆசிரியர் குழுமத்தினால் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50ஆவது பிறந்தநாளை கொண்டாடும் முகமாக நவம்பர் 2004 இல் பிரசுரிக்கப்பட்ட "விடுதலைப் போர்" எனும் புத்தகத்தில் பிதா இமானுவேலால் எழுதப்பட்ட "புதிய தமிழ் தேசத்தின் தலைவரும் மற்றும் சிற்பியுமானவருக்கு தலை வணங்குகிறேன்" எனும் கட்டுரை காணப்படுகிறது.

2010 ஒக்ரோபர் 10 இல் ஜேர்மனி எசெனில் நடந்த ஒரு எல்.ரீ.ரீ.ஈ கூட்டத்தில், ஜி.ரி.எப் இன் கீழ் ஈழத் தமிழர் இல்லப் பேரவை எனும் பெயரில் மற்றொரு முன்னணி அமைப்பை ஜேர்மனியில் நிறுவுவதற்கான நடவடிக்கை பிதா இமானுவேலால் மேற்கொள்ளப்பட்டது. உலகெங்கிலுமுள்ள எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் மற்றும் அங்கத்தவர்களை அணி திரட்டும் வகையில் இந்த உத்தி தற்சமயம் ஒஸ்லோவில் வாழும் நெடியவனால் உருவாக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

பிதா இமானுவேல் நன்றாகப் பேசக் கூடியவரும் சகலராலும் மதிக்கப்படும் ஒருவராக இருப்பதால், வெளிநாட்டிலுள்ள ஆங்கிலம் பேசத் தெரியாத எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் என்பனவற்றை இணங்கச் செய்வதற்கு இவரிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. மே 2009 இல் எல்.ரீ.ரீ.ஈ இற்கு ஏற்பட்ட தோல்வியில் இருந்து ஒரு மறுவரவை ஏற்படுத்த பிதா இமானுவேல் மிகவும் முக்கியமான பங்கினை வகித்தார்.

2011 நவம்பர் 26 இல் மாவீரர் தினத்தன்று ஜேர்மனியில் வைத்து பிதா இமானுவேல் வெளியிட்ட அறிக்கையில்: "சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், முன்னணி அமைப்புகள், மற்றும் மேற்கத்தைய நாடுகளில் வாழும் இளம் தமிழர்களது சந்ததி என்பனவற்றைப் பயன்படுத்தி, , எல்.ரீ.ரீ.ஈயின் இலட்சியங்களை தான் அடைவேன்" எனக் கூறியுள்ளார்.


எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் பணத்துக்காகவும் மற்றும் பதவிக்காகவும் தம்முள் சண்டையிட்ட போது பிதா இமானுவேல் எல்.ரீ.ரீ.ஈயின் பல்வேறு பிரிவினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினார். எல்.ரீ.ரீ.ஈ பிரிவினரிடையே ஒருவகையான புரிந்துணர்வு வேண்டியிருந்த போதெல்லாம் அதை வலியுறுத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை சேர்ந்த உருத்திரகுமாரன் மற்றும் ஜி.ரி.எப் இனைச் சேர்ந்த பிதா இமானுவேல் ஆகியோர்களினால் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்படும். முக்கியமாக 2012 மேயில் முதன்முறையாக இந்த இரண்டு நபர்களும், தமது பொதுவான நோக்கங்களுக்காக இணைந்தது முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் மூன்றாம் ஆண்டு ஞாபகமாக நடைபெற்ற விழாவின் போதுதான்.

ஐக்கிய இராச்சியத்தின் நெஸ்பே பிரபு குறிப்பிட்டது போல, "இலங்கையில் எப்போதாவது இன ஒழிப்பு இடம்பெற்றிருந்தால் அது எல்.ரீ.ரீ.ஈயால் நடாத்தப்பட்டதாகத்தான் இருக்கும். இலங்கையர்கள் எல்.ரீ.ரீ.ஈயினை தோற்கடித்ததை இழிவுபடுத்துவதற்காக பிரிவினைவாதிகள் இன ஒழிப்பு ஏனும் உணர்ச்சிகரமான வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள்."

ஐக்கிய இராச்சியம், கனடா, மற்றும் அமெரிக்கா என்பனவற்றில் செயற்படும் ஜி.ரி.எப் அங்கத்தவர்களின் பிரதிநிதிகள் இடையே ஸ்கைப் மூலமான ஒரு மாநாட்டை 2012, டிசம்பர் 31இல் அவர் ஏற்பாடு செய்திருந்தார், இதில், எல்.ரீ.ரீ.ஈ நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மனித உரிமை மீறல்கள், காணாமற் போதல், அரசியல் கைதிகள் மற்றும் பாதுகாப்பு படையினரால் பொதுமக்களின் காணி அபகரிப்பு போன்ற விடயங்களில் குற்றச்சாட்டுகளை புனைவதற்கு தனது ஆதரவை வழங்கிய மன்னார் ஆயர் வண. இராயப்பு ஜோசப்பும் உட்பட்டிருந்தார்.

மலேசியா முதல் அவுஸ்திரேலியா வரையிலும் மற்றும் மேற்கிலுமுள்ள ஆயர்கள் மற்றும் இதர மத தலைவர்களை இலங்கையிலுள்ள அவரது மனிதாபிமானத் திட்டங்களுக்கு நிதி வழங்குவதை இணங்க வைப்பதற்கான பிரதானமான பங்கினை பிதா இமானுவேல் ஏற்றிருந்தார். எனினும் தகவல் அறிந்த வட்டாரங்களின் கூற்றுப்படி ஜி.ரி.எப் அல்லது பிதா இமானுவேல் இவர்களில் யாரும் துன்பப்படும் வன்னித் தமிழர்களுக்காக அந்த நிதியினை வழங்கவில்லை.

பிதா இமானுவேல் மோதலில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவுவதற்காக மில்லியன் கணக்கான டொலர்களை சேகரித்துள்ளார் என்பதைக் கேள்விப்பட்ட புனர்வாழ்வு பெற்றுத் திரும்பிய அநேக எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் கொதித்துப் போனார்கள். எல்.ரீ.ரீ.ஈக்கு சார்பான பல புத்திஜீவிகளுடன் பிதா இமானுவேல் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறார். இவர்களில் நிதி சேகரிப்புக்காக பிதா இமானுவேல் தொடர்பு கொண்டவர்களில், கனடிய பாராளுமன்றத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவராக ஸ்கார்பரொ - ருஜ் ரிவர் பகுதியின் பிரதிநிதியாக உள்ள பேராசிரியர் மல்லிகாதேவி உள்ளார், அவர் சர்வதேச மன்னிப்புச் சபைக்காக நிதி சேகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்.



இன்று எல்.ரீ.ரீ.ஈயினை முன்னேற்றுவதில் ஆர்வமுள்ளவராக மட்டும் பிதா இமானுவேல் முக்கிய பங்கினை வகிக்கவில்லை, அடுத்த தலைமுறைத் தமிழர்களையும் பிரிவினைவாத போராட்டத்தை தொடர்ந்து நடாத்துவதற்கு இணங்கத் தூண்டுபவராகவும் அவர் உள்ளார்.

இலங்கையில் அதன் தோல்விக்குப் பின்னர் எல்.ரீ.ரீ.ஈயின் புதிய வடிவத்துக்கான சூத்திரதாரியாக பிதா இமானுவேல் கருதப்படுகிறார். வெளிநாடுகளிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் என்கிற போர்வையை போர்த்திக்கொண்டு சர்வதேச விசாரணைக்கும் மற்றும் பொறுப்புக்கூறலுக்கும் அழைப்பு விடுக்கிறார்கள். எல்.ரீ.ரீ.ஈயின் மனித உரிமை மீறல்களைப் பற்றி ஒரு போதும் பேசாதவர்கள், இப்போது கோட்டும் சூட்டும் மாட்டிக்கொண்டு ஜெனிவாவில் நடக்கும் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார்கள்.

இன்று ஜி.ரி.எப் மற்றும் அதன் தலைவர் பிதா இமானுவேல் ஆகியோர் ஐ.நா. சட்டம் 1373 இன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது சொல்லுக்கும் செயலுக்கும் கணக்கு கூறவேண்டிய காலம் வந்துவிட்டது. அவரது சொத்துக்களும் மற்றும் பணமும் முடக்கப்பட்டு. பல நாடுகளில் அவரால் திரட்டப்பட்ட பணத்தை அவர் என்ன செய்தார் என்பதை அறிய ஒரு சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். மிகவும் படித்த இலங்கையர்களில் ஒருவரான அவர் தனது பதவியை வேற்றுமையை வளர்க்கவும் மற்றும் நல்லிணக்கத்தை சிதைக்கவும் பயன்படுத்தியுள்ளார்.

சமூகங்களை இணைப்பதற்குப் பதிலாக மோதலினால் அதைப் பிரித்த பிதா இமானுவேல், பகைமையை விதைத்ததோடு சமூகங்களை துருவப்படுத்தினார். இளையோர்களினதும், முதியோர்களினதும் விசேடமாக குழந்தைகளினதும் மனங்களை சீர்குலையச் செய்ததின் மூலம் ஒரு மத ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட நியமனத்தையும் தனது பதவியையும் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

**(தொடரும்)**






# நிகழ்வுகளின் பதிவுகள்....

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற சுடர் எவ்.எம். இன் சினிமா கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற நீதிபதி திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றுவதையும் வாழ்நாள் பேராசிரியர் போ.பாலசுந்தரம் பிள்ளை கலைஞருக்கு விருது வழங்குவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (48)





காரைநகர் கற்கோவளம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்கந்த மகாயாகத்தின் இறுதி நாள் நிகழ்வுகள். (50)



முகமாலை ஏ-9 வீதிக்கு அருகே பொதுமகன் ஒருவரால் கட்டப்பட்ட பேருந்து தரிப்பிடத்தைக் காணலாம். (37)




அச்சுவேலி பத்தமேனி தீத்தாங்குள பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றபோது... (63)




முன்னாள் யாழ். மாநகர முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரட்ணம் நினைவாக கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் மாநகரசபை முதல்வர் உள்ளிட்ட விருந்தினர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும் உபகரணங்களைப் பெற்ற மாணவர்களையும் காணலாம். (63)



பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராம சேவையாளர் பிரிவில் கியூமெடிக்கா நிறுவனத்தால் 96 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன இவற்றில் 8 பேருக்கு கிராம சேவையாளர் நகுலேஸ்வரனால் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதைக் காணலாம். (36)



சாவகச்சேரி நகரப்பகுதிக்கு ரயில் சேவை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடாக மக்களை விழிப்பூட்டுவதற்காக சமிக்ஞை குறியீடுகள் ஒளிர விடப்பட்டுள்ளன. (85)

# வவுனியா -முல்லை பேருந்துகளுக்கு வழித்தட அனுமதிக்கு சீரான நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா பரந்தன் ஊடாக முல்லைத்தீவு வரையான பேருந்து வழித்தட அனுமதி வவுனியா மாவட்ட தனியார் பேருந்துகளுக்கு வழங்கப் பட்டுள்ளமையால் கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரி மையாளர்கள் பாரிய வருமான இழப்பை எதிர்கொள்கின்றனர். என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிர தித்தலைவருமான மு.சந்திர குமார் தெரிவித்துள்ளார் நேற்று முன்தினம் நடைபெற்ற கிளி நொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தில் கலந்துகொண்டு போக்கு வரத்து தொடர்பில் கருத்து தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு தெரவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்.

வவுனியா பரந்தன் ஊடாக முல்லைத்தீவு வரையான பேருந்து வழித்தட அனுமதி வவுனியா மாவட்ட பேருந்துகளுக்கு வழங் கப்பட்டிருப்பதனால் கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரி மையாளர்கள் பாரிய வருமான இழப்பை எதிர்கொள்கின்றனர். இவ்விடயம் ஏற்கனவே பிரச்சி னையாக கருதப்பட்ட நிலையில் மாகாண போக்குவரத்துத்துறை அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது. எனினும் குறித்த வழித்தட பேருந துகளின் எண்ணிக்கை எட்டில் இருந்து மூன்றாக குறைக்கப்பட் டதே தவிர சேவை நிறுத்தப்பட வில்லை. எனவே தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் பாதிப் புக்களையே எதிர்கொண்டு வருகின்றனர் ஆகவே வவு னியா பரந்த ஊடாக முல்லைத் தீவு வரையான வழித்தட அனு மதியை முற்றாக இரத்துச் செய் யப்பட்டு கிளிநொச்சியிலிருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவுக் கான சேவையை கிளிசொச்சி மாவட்ட தனியார் பேருந்துகளே மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு கிளிநொச்சியில் பேருந்து தரிப்பிடத்திற்குரிய சுமார் ஐந்து ஏக்கர் வரையான காணி டிப்போச் சந்தி எனப்படும் பகுதியில் இருந்தது அது தற் போது பொதுமக்களாலும் மற் றும் பல்வேறு தரப்பினராலும் அத்து மீறி ஆட்சிப்படுத்தப் பட் டுள்ள நிலையில் தற்போது மூன் றரை ஏக்கர் வரையான காணித துண்டு மட்டுமே எஞ்சியுள்ளது அங்கு தனியார் பேருந்து நிலை யமும் மற்றும் இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்குரிய பேருந்து நிலையமும் அமைக்கப்பட வேண டும். ஆனால் நகர்பகுதியில் போருந்து தரிப்பிடம் அமைக்கப் படுவது சூழலுக்கு பாதகமாக அமையும் என்ற நோக்கில் நகரை அண்டிய கனகபுரம் பகுதியிலும் மற்றும் அறிவியல் நகர் பகுதி யிலும்காணிகள் செய்யப்பட் டுள்ளன. இதில் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து பேருந்து தரிப்பிடங்களை அமைக்கமுடி யும் என்றார்.

இக்கலந்துரையாடலில் இர ணைமடு யாழ். குடிநீர்விநியோ கத்திட்டம்.மற்றும் தேசிய நீர் வ்ழங்கல் வடிகாலமைப்புச்சபை யின் குடிநீர் விநியோகத்திட்டம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டு அச் செயற்பாடுகளின் முன்னேற்றங் கள் குறித்தும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன.

# இசைநாடக கருத்தரங்கு

அல்வாய் கலை அகத்தின் அவை எற்பாட்டில் சாகித்திய ரத்னா தெணியான் தலைமை யில் இசை நாடக மரபும் பயில் வும் எனும் தலைப்பில்நேற்று முன்தினம் சனிக்கிழமை 4.15 மணியளவில் இசை நாடக கருத்தரங்கு இடம்பெற்றது.

அறிமுக உரைகளினை யாழ்ப் பாணப்பல்கலைக்கழக சட்டத் துறை தலைவர் கலாநிதி க.கலா மணி . தைரியநாதன் ஆகியோர் வழங்கினர்.

இசைநாடகப் பாடல்களை தை.யஸ்ரின் ஜெலுட் க.கலா மணி அண்ணாவியார் தைரிய நாதன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் இசைநாடகக் கலைஞர் க.விமலநாதன் அண் ணாவியார் எஸ்.சிதம்பரநாதன் ஆகியோர் இசை நாடகப் பாடல் களினை இசைத்து நடித்தனர். இந்நிகழ்வில் இசை நாடக ஆர் வலர்கள் கலந்து கொண்டனர் கள். (63)

# கம்பன் விழாவும் இறுவட்டு வெளியீடும்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன்விழா எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள் ளது. இவ்விழா வின் காலை நிகழ்வுகள் நல்லூர்க் கோவில் வீதியில் அமைந் துள்ள கம்பன் கோட்ட கலை யரங்கிலும் மாலை நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீ துர்க் காதேவி மணி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் கலந்து சிறப் பிக்கவென தமிழ் நாட்டிலிருந்து புகழ்பெற்ற பேச்சாளர்கள இலக் கியச்சுடர் த.இராமலிங்கம், பேராசிரியர் அசோக்குமரன், டாக்டர் ரெங்கராஜன் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இவ்வாண்டுக்கம்பன் விழா வின் திருநாள் மங்கலம்.

இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் ஆசியுரை வழங் குவர் யாழ். மேல் முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவருமான ஜெ.விஸ் வநாதன் தலைமையுரையாற்றி விழாவை ஆரம்பித்து வைக்க வுள்ளார்.

தொடர்ந்து இராமகீர்த்தனை நூறு 2013 இல் நடைபெற்ற யாழ்ப்பாணக்கம்பன்விழா இறு வட்டுக்களும் வெளியிட்டுவைக் கப்படவுள்ளன. இவற்றின் முதற் பிரதிகளை தினக்குரல் நிறுவு னர் எஸ்.பி.சாமியும் வடமராட் சிக் கம்பன் கழகஅமைப்பாளர் ப.தயாபரனும் பெற்றுக்கொள் ளவுள்ளனர்.

கம்பன்கழகம் நடத்திய கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் கள் வழங்கப்படும் இதனைத் தொடர்ந்து கம்பன் விழா தொடர் ந்து 3 தினங்கள் நடைபெறவுள் ளது. (10)

# பூநகரி பொது வைத்தியசாலை சேவைகள் ஆரம்பம்

(முழங்காவில்)

வடக்கின் வசந்தம் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் நிர்மாணத்திட்டத்தில் பலகோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பூநகரி அரசினர் பொதுவைத்தியசாலை நேற்று முன்தினம் புதிய கட்டடத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

கடந்த மூன்று வருட காலமாக எதுவித வசதியுமற்ற தனியார் வீடொன்றில் இவ்வைத்தியசாலை இயங்கி வந்தமை குறிப் பிடத்தக்கது.

மக்கள் படும் இன்னல் பற்றியும் வேலை முடிவடைந்தும் பூட் டிய நிலையில் இருக்கும் வைத்தியசாலையைத் திறக்க வேண்டிய அவசியம் பற்றி தினமுரசு பத்திரிகையில் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர் கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சை பெற்றுவருகை தந்திருந்தனர்.

பெருந்திரளான மக்கள் வைத்தியசாலையை பார்வை யிடுவதற்காக வைத்தியசாலை வளாகத்துக்கு வந்திருந்தனர். (112)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

இஸ்லாமிய மார்க்கப்பற்றுடைய 20 வயதிற்கு மேற் பட்ட பணிப்பெண் தேவை. நாங்கள் வெளிநாடு செல்ல விருப்பதால் எனது தாயாருடன் 12 வயதுக்குழந்தையை பராமரிப்பதற்கு (குடும்பத்தில் ஒருவரைப் போல் பரா மரிக்கப்படுவார்) Zameena 0113053387, 0727944586.

---

எங்கள் சிறிய குடும்பத்திற்கு நாங்கள் இருவரும் வேலைக்கு செல்வதால் வீட்டை சுத்திகரிப்பு செய்து கொண்டு வீட்டில் ஒருவரைப்போல் இருப்பதற்கு 30 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் 18.000, 25,000 Kanthi 0315676004, 0712886901.

---

வைத்தியரின் வீட்டுக்கு 3 வயது குழந்தையை பரா மரித்து கொள்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. வடகிழக்கு விரும்பத்தக்கது. குடும்பத்தில் ஒரு வரைப்போல பராமரிக்கப்படுவார். தகுதிக்கேற்ப சம்பளம் இல 116/8 புத்தளம் வீதி நீர்கொழும்பு, 0314938025, 075 9600277.

---

நாங்கள் இருவரும் காரியாலயத்திற்கு செல்வதால் எங்களது 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கு சிங்க ளம் பேசக்கூடிய தமிழ் பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கின்றோம். தனி அறையுடன் 15,000- 20,000 வரை வழங்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். 0752994001

---

கண்டியில் தனிமையில் வசிக்கும் எனது தாயாருடன் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. (வீட்டில் ஒருவரைப் போல இருப்பதற்கு) 0814945224, 0772138364.

---

நாங்கள் வெளிநாடு செல்ல இருப்பதினால் எங்களது அம்மாவிற்கும் 16 வயதான பாடசாலை செல்லும் மகளுக்கும் சமைத்துக் கொடுப்பதற்கு சிங்களம் பேசக்கூடிய தமிழ் பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கின்றோம். தனி அறையுடன் சம்பளம் 16,000- 20,000 வரை வழங்கப்படும் மஹரகம. 0722761000.

---

கண்டி நுவரெலியா, ஹட்டன், இரத்தினபுரி, பண்டா ரவளை, வவுனியா, மட்டக்களப்பு, கொழும்ப, குருணா கல்) எமது ஆட்சேர்ப்பு நிலையங்கள்30,000 இற்கு மேல் மாத சம்பளம் வயது 18-55 பிரதான தொழிற்சாலை களான ஜேம், கோடியல், பிஸ்கட் சொக்லேட், பால்மா, PVC தேயிலை என்பவற்றில் உற்பத்தி, பொதியிடல், களஞ்சியப் பிரிவில் வேலைவாய்ப்பு, விமான நிலையம், துறைமுகம், கிளினிங், கேட்டரிங், லொன்றி, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், Hotel, தமிழ் முஸ்லிம் ஆண், பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு தொடர்புக்கு 0778508118.

---

கொழும்பை அண்மித்த பகுதிகளில் ஜேம், கோடியல், பால்மா சொக்லேட், ஐஸ்கீரிம், யோகட், மோர்டீன், கிளவுஸ், பிளாஸ்டிக் போன்ற தொழிற்சாலைகளில் மற்றும் Hotel Construction Side விமான நிலையம் (தனியார்), துறைமுகம் (தனியார்) பாதுகாப்பு உத்தி யோகஸ்தர்கள் பணிப்பெண்களும் இணைத்துக் கொள் ளப்படுவீர்கள், உணவு, தங்குமிடம் குறைந்த விலை களில் சம்பளம் 19,000, 25,000-39,000 வயது (17-50) (கார்மன்டில் Machine Operator தெரிந்தவர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசம், மாத சம்பளம் 25,000 மேல் தொடர்புக்கு: 0778430179.

---

கொழும்பிலுள்ள கடதாசிபொதி செய்யும் தொழிற் சாலை ஒன்றிற்கு ஆண்களும் பெண்களும் வேலைக்கு தேவை. சம்பளம் 18,000 முதல் 24,000 வரை இலவச மதிய உணவு தங்குமிட வசதிகள் நேர்முகப்பரீட்சைக்கு கீழ் காணும் விபரம் படி நேரில் வரவும் நேரம் காலை 9.00 - மாலை 3.00 விலாசம் 136 Francewatta. Lane. Mattakuliya, Colombo-15

---

காபன் உற்பத்தி தொழிற்சாலைக்கு ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. சம்பளம் ஒருவருக்கு ஒரு வேலை நேரத்திற்கு 1000 25இற்கு 25,000 30 இற்கு 31,500- 36 இற்கு 43,500, 40இற்கு 56,000 பெறமுடியும். தேசிய அடையாள அட்டையுடன் வருகைதரவும், இணைத்துக் கொள்ளல் அன்றைய தினமே 0719797702, Tamil 0770866468 Sinhalam.

# பெண்ணிடம் திருமண ஆசைகாட்டி அரங்கேறிய கொள்ளை

## திருமண விளம்பரத்தால் வந்த விபரீதம்

பெண் ஒருவருக்கு திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதியளித்து, அவரை அழைத்துச் சென்று கட்டி வைத்து தங்க நகைகளை பறித்து, பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்திய நபர் தப்பிச் சென்றுள்ளார்.

ஹட்டன் பகுதியில் பிரபல தமிழ் பாடசாலையில் ஒன்றில் பணிபுரியும் 27 வயதான பெண்ணே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணை திருமணம் செய்துகொள்வதாக தெரிவித்து அவரை ஒரு முச்சக்கரவண்டியில் நோர்வூட் கோர்த்தி பகுதிக்கு சந்தேகநபர் அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு பெண்ணை கட்டிப்போட்டு தங்க ஆபரணங்களை அபகரித்து பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தியுள்ளார். நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் கோர்த்தி பகுதியில் வசிக்கும் அரச உத்தியோத்தர் ஒருவருக்கு இச்சம்பவம் பற்றி தெரிவித்த பின் மேற்படி அதிகாரி நோர்வூட் பொலிஸாருக்கு முறைபாடு செய்துள்ளார்.

இதன்பின் நோர்வூட் பொலிஸர் அவ்விடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட பெண்ணை டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஒரு பத்திரிகையில் இருந்த திருமண அறிவித்தல் படி சந்தேகநபரிடம் 10 நாட்களாக தொடர்பு இருந்ததாகவும் நேற்று முன்தினம் சந்தேகநபர் தன்னை சந்திக்க வேண்டும் என தெரிவித்தபோது மாலை 4.30 மணியளவில் ஹட்டன் நகரில் வைத்து சந்தித்ததாகவும் அதன் பின் சந்தேகநபர் முச்சக்கர வண்டியில் அழைத்துச் சென்றதாகவும் அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

குடிப்பதற்கு குளிர்பானம் கொடுத்ததாகவும் அதன் பின் தனக்கு என்ன நடந்தது என தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். பெண்ணின் முறைபாடு சந்தேகத்திற்கிடமாக இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்திருக்கும் பெண்ணை நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரியிடம் பரிசோதனைக்காக அனுப்பியுள்ளதாக நோர்வூட் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# உக்ரைனிலிருந்து இலங்கையர்களை அழைக்கும் திட்டம் இல்லை

உக்ரைனிலிருந்து இலங்கையர்களை அழைத்துக் கொள்ளும் திட்டம் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உகரைனில் இடம்பெற்று வரும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

எனினும், உக்ரைனில் வாழ்ந்து வரும் இலங்கையர்களை அவசரமாக மீள அழைக்கும் திட்டங்கள் எதுவும் தற் போதைக்கு கிடையாது என ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். உக்ரைனில் 200 இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இதில் 60 பேர் மாணவரை உக்ரைனில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தொடர்புகள் பேணப்பட்டு வரு வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்த 37 மாணவர்களுக்கு பரிசில்கள்


கொமர்ஷல் வங்கியின் அருணலு திட்டத்தில் மூலம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 37 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கொமாஷல் வங்கியின யாழ். கிளையில், வங்கி முகாமையாளர் தர்மலிங்கம் தேவராஜன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதலாம் , இரண்டாம், மூன்றாம் இடத்தினைப் பெற்று வங்கியில் 10 ஆயிரம், 7,500, மற்றும் 5000 பணத்தினை வைப்பிலிட்ட மாணவர்களுக்கு இப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னரான ஒரு வருடத்தில் மாணவர்களின் வங்கி கணக்கில் 10 ஆயிரம் ரூபா வைப்பிலிட்ட மாணவர்களுக்கே அருணலு புலமைப்பரிசில் திட்டத்தில் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.எழில்வேந்தன், மற்றும் யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி அதிபர். விஜய சுந்தரம் உட்பட பாடசாலை மாணவர்கள்,பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (25)

# திருக்கேதீஸ்வரம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்லபரம்பொருளான சிவபெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கும் நோக்கில் திருக்கேதீஸ்வரர் எனும் திருநாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருத்தலம் தான் திருக்கேதீஸ்வரம்.

அந்த அருள்மிகு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று கொடியேற்றம் தற்போது பிறந்திருக்கும் ஜய வருடத்துக்கான திவ்ய பெரும் மஹோற்சவம் இன்று முதல் தொடர்ந்து வைகாசிவிசாகம் வரையான 11 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பிரச்சித்தி பெற்ற புகழ்மிக்க ஆலயமான இந்தத் திருக்கேதீஸ்வரம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் தேவாரம் பாடப்பெற்ற ஓர் அருள்மிகு திருத்தலமாகும்.

இந்த ஆலயம் மிகப் புராதனமானது, வேத காலத்துக்கு முந்தியது.கேது வழிபட்ட தலமாதலால் கேதீச்சரம் என்று கூறப்படுகின்றது. இந்த ஆலயத்துக்கு அருகில் ''பாலாவி'' என்று அழைக்கப்படுகின்ற ஓர் அருமையான தீர்த்தம் உள்ளது. இது ஒரு புனித புண்ணிய தீர்த்தமாகும். இந்தப் பாலாவியில் நீராடினால் எல்லா நோயும் பறந்தோடி விடும் என்பது பாரறிந்த உண்மை. தேவர்களும் முனிவர்களும் ரிஷி புங்கவர்களும் இதில் மூழ்கி எழுந்து பாவந்தீர்ந்து புனிதமாகினார்கள் என்று வரலாறு பேசுகின்றது. இந்தத் திருக்கேதீஸ்வர ஆலய மன்னாரிலே மாந்தை எனப்படும் மாதோட்ட நகரிலே மிகவும் அழகான வானளவை உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

திருஞானசம்பந்தர் தமது தேவாரத் திருப்பதிகத்திலே "கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கருவினையாடலே" என்று "கேடிலாத கேதீச்சரந் தொழக் கெடும இடர்வினைதானே'' என்னும் அன்னல் நண்ணு கேதீச்சரம் அடைபவருக்கு அருவினை அடையவே என்றும் முடிகள் சாய்தடி பேணவல்லர்தம் மேல் மொய்த்தெழும் வினைபோமே என்றும் மிக அழகாகப் பாடியிருக்கின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தமது தேவாரத் திருப்பதிகத்திலே "அங்கத்துறு நோய்கள் அடியார் மேலொழித்தருளி" என்றும் "வெய்வினையாயவடியார் மேலொழித்தருளி" என்றும் "ஊனத்துறு நோய்கள் அடியார் மேலொளித் தருளி" என்றும் மிகவும் அழகாகப் பாடியிருக்கின்றார்.

இந்தத் திருக்கேதீச்சரம் கோவிலில் கேதீஸ்வரநாதர் கௌரியம்மையோடு எழுந்தருளி வீதியுலாவரும் அழகு பக்திபூர்வமானது முன்னே மங்கள இசை முழங்க அடியார்கள் "ஓம் நமசிவாய சிவாயநம ஓம்" என்று உச்சரித்த வண்ணம் இரு மருங்கும் சூழ பக்தியுடன் வர சிவபெருமானுடைய அலங்கார அற்புதக் காட்சி காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அழகே உருவான ஆனந்த கோலாகலத் திருவிழாக்கள் அனைத்துப் பக்திபூர்வமானவை.

இந்த ஆனந்த அற்புதத் திருவிழாக்களைப் பார்ப்பதற்காக இலங்கையின் நாலாபுறங்களிலிருந்தும் அடியார்கள் இவ்வாலயத்துக்கு வருகை தந்தவண்ணமாயிருப்பார்கள்.

இச்த மஹோற்சவ காலத்தில் கோயிலைச் சூழவுள்ள திருமடங்களில் மகேஸ்வர பூசை என்று சொல்லப்படுகின்ற அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கப்படும் திருக்கேதீஸ்வர நாதரையும், கௌரி அம்பாளையும் தரிசிக்க வரும் அடியார்கள் இந்த அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டு பசியாறிச் செல்வார்கள்.

இடைவிட, கோவிலின் உட்பிரகாசத் திலிருக்கும் பெரிய சிவலிங்கத் துக்கு அடியார்கள் பாலாவித் தீர்த்தத்திலிருந்து குடத்திலே தண்ணீர் எடுத்துத் தலையிலே தாங்கிய வண்ணம் வரிசையாக வந்து சிவலிங்க அபிஷேகம் செய்யும் அருட்காட்சியும் பவித்திரமானது. இது ஓர் அற்புத நிகழ்வு ஆகவே இவ்வாறு தொடங்கி விசாகம் வரைக்கும் தொடர்ந்து நடைபெறுகின்ற திவ்யமகோற்சவப் பெருவிழாவைக் கண்டுகளிக்க எம்பெருமானுடைய திருவருட் சக்தியை வேண்டிநிற்பதோடு.

அடுத்தபடியாக கேதீஸ்வரப் பெருமானுடைய திருவருட் கருணை மேம்பாட்டினால் அவர் விழாவைக் கண்டுகளிக்க அவரருளையே நிதமும் நாம் இறையருளை நாடி நிற்பதுடன் அவனருளாலே அவன்தான் பணிந்து எல்லோரும் சதுர்வித புருஷார்தங்களைப் பெற்றுய்வோமாக .

* * *

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

## இன்று கொடியேற்றம்

# பரமர் சங்கமம்



'கழுவுற மீனில் நழுவுற மீன்' எண்டால் எப்பழிப்பட்டதாய் இருக்கும்? மீன் உயிரா இருக்கேக்க எப்பழியோ புழச்சு வந்து கறி ஆக்கக் கழுவுற நேரத்திலும் நழுவிப்போகும் இயல்பதுக்கு.

பரமர் சங்கமத்தில் ஐம்பது வீதம் பழமொழிகள்தான் ஆட்சி செய்யுது. இண்டைக்குப் பேசப்படும் விசயத்துக்கு பழமொழி தேடுகையில் சிரமத்தின் மத்தியில் கிடைச்ச பழமொழி.

யாழ்ப்பாணத் தொழில் திணைக்களம் சிவன் பண்ணை வீதியில் புதிய கட்டடத்தில் செயறபடத் தொடங்கியதும் வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் கனகேஸ்வரன் முயற்சியில் சில விடயங்கள் தூசிதட்டி தொடங்கும் காரியங்கள் நடைபெறுவதாப் பத்திரிகைச் செய்திகளில் பாக்கக் கிடைச்சுது.

அப்புழயெண்டாத் தொழிலாளர் வாழ்க்கையிலை புதிய அத்தியாயம் தொடங்குதெண்டு நினைக்கலாம். பொதுவாக அரச திணைக்களச் செயற்பாடுகள் கழுவுற மீனில நழுவுற மீனாக அப்புழ இப்புழச் செயற்படாமல் தட்டிக் கழிவது தான் வழக்கம்.

1947 இல் நடைமுறைக்கு வந்த சாய்ப்புச் சட்டம் இது வரையில் எங்கேயும் ஒழுங்காகக் கடைப்புழச்சதா அறிய முழ யேல்லை. அதிலே வடகிழக்குப் பிரதேசங்களில் முப்பதாண் டுகள் வீணழக்கப்பட்டுப் போயிற்று.

அதற்கு முன்பாக தொழில் நீதிமன்றம் சாவகச்சேரியில் செயற்பட்டதை கேள்விப்பட்டம். கடந்த மே மாதம் 23 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாண தொழில் ஆலோசனை சபைக் கூட்டத்தில் பேசுகையில் பிரதிப் பணிப்பாளர் விரைவில் தொழில் நீதிமன்றத்தை நிறுவி இயக்குவதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று வருவ தாகக் குறிப்பிட்டிருந்தார்.

2013 ஆம் ஆண்டு நீதியமைச்சர் ரவூப்ஹக்கீமுக்கு தெரிவித்தும் இன்னமும் அவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நீதியமைச்சரின் நழுவல் போக்கு வடபகுதித் தொழிலாளர்களிடம் தொழில்கொள்வோரின் காட்டில் நல்ல மழையைத்தான் பெய்து கொண்டிருக்கு. கழுவுற மீனில் நழுவுற மீனாக செயறபடும் வடபகுதி முதலாளிகள் இன்னமும் எத்தனை வருடங்களுக்கு இழுத்தடிப்பார்களோ இருந்தே பாக்கவேணும்.

தொழிலாளர் பிணக்குகள் வடபகுதியில் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதித் தொழில் ஆணையாளர் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் இணைக் கப்படும் தொழிலாளர்களுக்கு சேமலாப நிதி கிடைக்க பிரதி திங்கட்கிழமைகளிலும் ஐம்பது தொழில் தருநர்களை யாழ்.வணிகர் கழகத்திற்கு அழைத்து அறிவுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

வீணாக்கப்பட்ட காலங்கள் முழவுக்கு வந்தும் ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னமும் தொழிலாளர்கள் சமூகத்துக்கு சரியான நீதி கிடைக்கவில்லை என்பதை இது துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

இதேவேளை பெண் தொழிலாளர் அதிகரித்துச் சுரண்டப்படும் நிலைமை காணப்படுகிறது. தூர இடங்களில் இருந்து வேலைக்கு வந்து போவதிலே சம்பளத்தின் மூண்டிலொண்டு காலி.சாப்பாடு அப்பழ இப்பழத்தான் மாசம் எண்ணாயிராம் சம்பளம்.

தொழில் நீதிமன்றம், ஊழியர் சேமலாப நிதி விடயங்களும் அறுவது ஆண்டுகளுக்கும் மேலாகக் கழுவுற மீனில நழுவுற மீனாக இருந்து கொண்டிருப்பதை இனியும்விட்டுவிட ஏலாது என்ன நான் சொல்லுறே..

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞானபாட பயிற்சிப் பரீட்சை

01) ஆவிப்பறப்பற்ற கரையம் A ஆனது கரைப்பான் B யில் கரைந்து இலட்சியக் கரைசல் C யை உண்டாக்குகின்றது. ஒரு தரப்பட்ட வெப்பநிலையில் தூய கரைப்பானினதும் கரைசல் C யினதும் ஆவியமுக்கங்கள் முறையே $P^o$, P ஆகும். கரைசல் C யில் கரைப்பானின் மூல் பின்னம் $x_B$ ஆகும்.

i) மேலே தரப்பட்ட குறியீடுகளின் சார்பில் கரைசல் C யிற்கான இரவோற்றின் விதியைச் சமன்பாட்டின் வடிவத்தில் எழுதுக.

ii) கரைசல் C இல் கரையத்தின் மூல் பின்னம் $x_A$ ஆகும். இரவோற்றின் விதிக்கான ஒரு சமன்பாட்டை P, $P^o$, $x_A$ ஆகியவற்றின் சார்பில் எழுதுக. இதிலிருந்து $x_A$ இற்கான ஒரு கணிதக் கோவையைப் பெறுக.

iii) P, Q, R என்னும் பின்வரும் கரைசல்கள் ஒவ்வொன்றிலும் கரையத்தின் மூல் பின்னத்தை கணிக்க.

P : அடர்த்தி 1.26 $g\,cm^{-3}$ ஐ உடைய குளுக்கோசின் 2.0 $mol\,dm^{-3}$ நீர்க் கரைசல்

Q : நீரின் 162 g இல் குளுக்கோசின் 180g ஐக் கொண்ட கரைசல்.


R : நீரின் 171 $cm^3$ இல் சுக்குரோசின் 171 g ஐக் கொண்ட கரைசல்.

நீரின் அடர்த்தி 1.0 $g\,cm^{-3}$ எனக் கருதுக.
நீர், குளுக்கோசு, சுக்குரோசு ஆகியவற்றின் சார் மூலக்கூற்றுத் திணிவுகள் முறையே 18, 180, 342 ஆகும்.

iv) இரவோற்றின் விதிக்கேற்ப P,Q,R ஆகிய கரைசல்கள் அவற்றின் ஆவியமுக்கங்கள் அதிகரிக்கும் வரிசையில் ஒழுங்குபடுத்துக.

v) அறிந்த திணிவுகளைக் கொண்ட குளுக்கோசு, சுக்குரோசு, நீர் ஆகியன அடங்கும் ஒரு கலவையின் ஆவியமுக்கத்திற்கான இரவோற்றின் விதியை ஒரு சமன்பாடாக எழுதுக.

02) இரண்டு, ஒன்றுடனொன்று தாக்கம் புரியாத ஆனால் சகல விதங்களிலும் கலக்குந்தகவுள்ள திரவங்கள் X உம் Y உம் வெப்பநிலை $T_x$ இலிருந்து $T_y$ வரைக்கும் அவற்றினுடைய ஆவி அவத்தையுடன் சமநிலையில் இருக்கின்றன. இச்சமநிலை பின்வரும் அவத்தை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




$T_x$ = தூய X இன் கொதி நிலை
$T_Y$ = தூய Y இன் கொதிநிலை

மேலுள்ள அவத்தை வரைபடத்தைப் பயன்படுத்தி வினாக்கள் i, ii ஆகியவற்றிற்கு விடையளிக்க.

i. X,Y ஆகியவற்றினது சமமூலர் கரைசலொன்று ஆவி அவத்தையுடன் சமநிலையில் இருப்பின் ஆவி அவத்தையில் X இனதும் Y இனதும் மூலர் விகிதம் (X :Y) யாது?

ii) X இனதும் Y இனதும் கலவையொன்று எப்படி அதன் தூய கூறுகளாகப் பிரித்தெடுக்கப்படலாமென்பதைச் சுருக்கமாக விளக்குக.


03) A உம் B உம் T வெப்ப நிலையில், எல்லா விகிதத்திலும் ஒன்றுடனொன்று கரைந்து இலட்சியக் கரைசல்களை உருவாக்கக்கூடிய தூய திரவங்களாகும். A இனது கொதி நிலை B இனதிலும் பார்க்கக்கூடியதாகும். வரைபடம் 1 இல் பின்வருவனவற்றைக் குறிக்க வரைக.

i) $P^o_A$ உம் $P^o_B$ உம் : தூய A இனது ஆவி அமுக்கத்தையும் தூய B இனது ஆவி அமுக்கத்தையும் முறையே குறிக்கின்ற சார் புள்ளிகள்.

ii) $P_A$ : A இனது ஆவியமுக்கம், அமைப்பு (composition) உடன் மாறுதலைக் காட்டும் கோடு / களைகோடு

iii) $P_B$ : B இனது ஆவியமுக்கம், அமைப்புடன் மாறுதலைக் காட்டும் கோடு / வளைகோடு

iv) $P_T$: மொத்த ஆவியமுக்கம், அமைப்புடன் மாறுதலைக் காட்டும் கோடு/ வளைகோடு




v) அதன் ஆவியுடன் சமநிலையிலுள்ள A, B ஆகியவற்றின் சமமூலர் கரைசலொன்றிற்கு ஆவி அவத்தையிலுள்ள A இன் மூல் பின்னம்.

$$\frac{P^o_A}{P^o_A + P^o_B}$$ எனக் காட்டுக

vi) A, B ஆகியவற்றின் கரைசல்களிற்கு வெப்பநிலை -அமைப்பு அவத்தை வரைபடத்தை வரைபடம் 2 இல் வரைக. உமது வரைபடத்தில் பின்வருவன வற்றைக் குறிக்க.

I) தூய A இன் கொதிநிலை $T^o_A$

II) தூய B இன் கொதிநிலை $T^o_B$

III) பின்வரும் அவத்தைகளுள்ள பகுதிகள்
திரவம், ஆவி, திரவமும் ஆகியும் ஒன்றாக.

i) வெப்பநிலை T இல் D, E, F ஆகிய தூய திரவங்கள் ஒன்றுடனொன்று DE, EF, DF ஆகிய துவித ஏகவினக் கரைசல்களை உண்டாக்குகின்றன. D,E,F ஆகியவற்றின் ஏதாவது இரு மூலக்கூறுகளுக்கிடையேயுள்ள இடைத்தாக்க விசைகள் கீழுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறு உள்ளன.


| Molecule | D | E | F |
|---|---|---|---|
| D | d | b | c |
| E | b | c | a |
| F | c | a | f |

பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- d = c = f
- d, e ஆகியவற்றிலும் பார்க்க b நுண்ணியளவு சிறியது.
- e, f ஆகியவற்றிலும் பார்க்க a நுண்ணியளவு பெரியது.

தரப்பட்ட வெப்பநிலையில் D, E, F ஆகிய மூன்று திரவங்களினதும் ஆவி அமுக்கங்கள் முறையே $P_D$ உம் $P_E$ உம் $P_F$ உம் ஆகும். இங்கு $P_D > P_E : P_F > P_D$

கீழே தரப்பட்ட வரைபடங்களிலுள்ள ஆறு நிலைக்குத்து அச்சுகள் ஒவ்வொன்றிலும் அவ்வச்சுக்குப் பொருந்தக்கூடியதாக $P_D$, $P_E$, $P_F$ ஆகியவற்றினால் குறிக்க.



ii. DE, EF, DF ஆகிய மூன்று கரைசல்கள் ஒவ்வொன்றினதும் மொத்த ஆவி அமுக்கத்தில் நிகழக்கூடிய மாறல்களை பொருத்தமான வரைபடங்களில் சுட்டிக் காட்டுக.

ii) D இன் $\alpha$ mol உம் F $\gamma$ mol உம் கலக்கப்பட்டு கரைசல் DF பெறப்படுகின்றது. வெப்பநிலை 'T இல் கரைசல் DF இற்கு மேலுள்ள மொத்தச் சமநிலை ஆவி அமுக்கம் P ஆகும். ஆவி அவத்தையில் மூலக்கூற்றிடை விசைகள் இல்லையென எடுத்துக்கொள்ளலாம்.

வேறு குறியீடுகளைப் பயன்படுத்தாமல் மேலே 2(b)(i) இலும் (ii) இலும் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை மாத்திரம் உபயோகித்துப் பின்வருவன வற்றிற்கான கணிதக் கோவைகளை எழுதுக.

i) ஆவி அவத்தையில் D இன் பகுதி அமுக்கம்.

ii) ஆவி அவத்தையில் F இன் பகுதி அமுக்கம்.

iii) ஆவி அவத்தையிலுள்ள D இன் மூல்களின் எண்ணிக்கை

**04)** மூடிய பாத்திரமொன்று வெப்பநிலை Q இல் A, B, C ஆகிய மூலக்கூறுகளை மாத்திரம் கொண்டுள்ள ஆவி அவத்தையுடன் சமநிலை யிலுள்ள A,B,C ஆகிய மூன்று ஆவிப்பறப்புள்ள திரவங்களின் கரைசலொன்றைக் கொண்டுள்ளது. மொத்த ஆவி அமுக்கம் H ஆகும். திரவ அவத்தையில் மூலக்கூறுகளுக்கிடையிலுள்ள விசைகளுக்கு முற்றாக ஒரே சீரான தன்மை இருக்கின்ற அதேவேளையில், ஆவி அவத்தையில், மூலக்கூறுகளுக்கிடையில் இடைத்தாக்க விசைகள் எவையும் இல்லை. மேற்கூறிய தொகுதியினதும் அதன் தூய கூறுகளினதும் சில தேர்ந்தெடுத்த இயல்புகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | தூயதிரவம் | | திரவ அவத்தை | | திரவ அவத்தை | |
|---|---|---|---|---|---|---|
| சேர்வை | ஆவி அமுக்கம் | சார்மூலக் கூற்றுத் திணிவு | மூலக்கூறுகளின் எண்ணிக்கை | மூல்களின் எண்ணிக்கை | மூலக்கூறுகளின் எண்ணிக்கை | மூல்களின் எண்ணிக்கை |
| A | H/2 | L | a | b | a /3 | |
| B | | M | 2a | | | |
| C | | N | | 3b | | b |

வேறு குறியீடுகளைப் பயன்படுத்தாமல் இவ்வினாவில் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை மாத்திரம் உபயோகித்துப் பின்வருவனவற்றிற்கான கோவைகளை எழுதுவதுடன் அவற்றை இயலுமான வரை எளிதாக்குக.

i) அவகாதரோவின் மாறிலி NA.

ii) திரவ அவத்தையிலுள்ள B இன் மூல்களின் எண்ணிக்கை q.

iii) திரவ அவத்தையிலுள்ள C இன் மூலக்கூறுகளின் எண்ணிக்கை c.

iv) திரவ அவத்தையிலுள்ள A,B, C ஆகியவற்றின் மூல் பின்னங்கள்.

v) ஆவி அவத்தையிலுள்ள B இன் பகுதி அமுக்கம்.

vi) ஆவி அவத்தையிலுள்ள மூல்களின் எண்ணிக்கை T

vii) ஆவி அவத்தையிலுள்ள A,B,C ஆகியவற்றின் மூல் பின்னங்கள்.

viii) ஆவி அவத்தையிலுள்ள A இனதும் C இனதும் பகுதி அமுக்கங்கள்.

xi) வாயு மாறிலி R எனில் ஆவி அவத்தையின் கனவளவு G.

x) ஆவி அவத்தையிலுள்ள A மூலக்கூறுகளின் சராசரி வர்க்கக் கதி $C^2_A$

**05) எல்லாப் பகுதிகளுக்கும் விடை தருக.**

a) i) M ஆனது ஒரு 3d - தாண்டல் மூலகமாகும். M ஆனது ஓர் உறுதியான வெள்ளை நிறமுள்ள ஈரொட்சைட்டு $MO_2$ ஐ உருவாக்குகின்றது.

A) M ஐ இனங்காண்க

B) M இன் முழுமையான இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

c) M, $MO_2$ ஆகிய ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு கைத்தொழிற் பிரயோகத்தைத் தருக.

ii) இரு 3d தாண்டல் உலோகக் குளோரைட்டுக்களை நீரில் கரைத்துத் தயாரிக்கப்பட்ட கரைசல் (கரைசல் S) ஒன்றில் செய்யப்பட்ட பரிசோதனை களும் அவற்றிற்குரிய அவதானிப்புகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**பரிசோதனை**

A) கரைசல் S இற்கு நீர் NaCH சேர்க்கப்பட்டது.

B) கரைசல் S ஆனது நீர் NaOH உடனும் $H_2O_2$ உடனும் இளஞ்சூடாக்கப்பட்டு, வடிகட்டப்பட்டது.

C) மேலே (B) இல் பெறப்பட்ட வீழ்படிவிற்குச் செறி HCl சேர்க்கப்பட்டது.

D) மேலே (C) இல் பெறப்பட்ட மஞ்சள் கரைசல் ஐதாக்கப்பட்டு, $H_2S$ செலுத்தப்பட்டது.

**அவதானிப்பு**

A) நீல - பச்சை வீழ்படிவு பெறப்பட்டது.

B) வீழ்படிவும் மஞ்சள் வடிதிரவமும் பெறப்பட்டன.

C) மஞ்சள் கரைசல் பெறப்பட்டது.

D) கறுப்பு வீழ்படிவு பெறப்பட்டது.

கரைசல் S இல் உள்ள கற்றயன்களை இனங்காண்க.

பரிசோதனை (B) இலிருந்து பெறப்பட்ட வடிதிரவத்தின் மஞ்சள் நிறத்திற்குக் காரணமான அயனையும் பரிசோதனை (C) இல் பெறப்பட்ட கரைசலின் மஞ்சள் நிறத்திற்குக் காரணமான அயனையும் இனங்காண்க. மேற்குறிப்பிட்ட தாக்கங்களில் இவ்விரு அயன்களும் உண்டாவதற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

(B) இலிருந்து பெறப்பட்ட வடிதிரவம் அமிலமாக்கப்படும்போது என்ன அவதானிப்பை நீர் எதிர்பார்ப்பீர்? பொருத்தமான சமன்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டைத் தருக.

b) அமோனியாவானது $N_2$ ஐயும், $H_2$ ஐயும் பயன்படுத்திக் கைத்தொழில் ரீதியில் தயாரிக்கப்படுகின்றது. பின்வரும் வினாக்கள் $HN_3$ இன் உற்பத்திக்கான எபர் (Haber) முறையுடன் தொடர்புபட்ட வை.

1) இம்முறைக்குப் பயன்படுத்தப்படும் $N_2$ இனதும் $H_3$ இனதும் மூலகங்கள் (sources) யாவை?

2) இங்கே பயன்படுத்தப்படும் குறித்த தாக்க நிபந்தனைகள் (வெப்பநிலை, அமுக்கம், ஊக்கி ஆகியன) யாவை?

3) முற்தாக்க வீதம், பிற்தாக்க வீதம், சமநிலை மாறிலி ஆகியவற்றை ஊக்கி எங்ஙனம் பாதிக்கும்?

4) $NH_3$ ஒட்சியேற்றப்படும் ஒரு கைத்தொழிலைக் குறிப்பிடுக. இவ்வொட்சி யேற்றத்தில் பயன்படுத்தப்படும் தாக்க நிபந்தனைகள் யாவை?

5) அமோனியாவின் வீட்டு உபயோகம் ஒன்றைத் தருக.

6) பின்வரும் ஒவ்வொன்றுடனுமான அமோனியாவின் தாக்கங்களிற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாடுகளையும் அவசியமான தாக்க நிபந்தனைகளையும் எழுதுக.
CuO, $I_2$, Na

7)
A) உரக் கைத்தொழில்
B) இறப்பர்க் கைத்தொழில்
ஆகிய ஒவ்வொன்றிலும் பயன்படுத்தப்படும் அமோனியம் சேர்வை ஒன்றைப் பெயரிடுக. சம்பந்தப்பட்ட கைத்தொழிலில் இச்சேர்வைகள் ஒவ்வொன்றினதும் பங்கைக் குறிப்பிடுக.

## உழவு இயந்திரம் திருடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரம் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்த உழவு இயந்திரத்தினை திருடிச் சென்று, யாழ். பண்ணைப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு திருடிய குற்றச்சாட்டில் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்பிரதிப் பொலிஸ்மா அதிபரின் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டு தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற் கான நடவடிக்கையினை மேற் கொண்டுள்ளதாக தெல்லிப் பளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

## வற்றாப்பளை ஆலயத் திருவிழாவிற்கு 4 இலட்சம் பக்தர்கள் திரள்வர்

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த திருவிழாவிற்கு 4 இலட்சம் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது..

எதிர்வரும் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இத்திருவிழாவை கோலாகலமாக நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திருவிழாவிற்கு உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் 4 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கோவில் சுற்றுப் புறங்களை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மலசலகூட வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவசியமான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.


இப்பணிகளில் அண்மையில் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகளும் ஈடுபடுத்தப்பட்டனர். இனங்களுக்கிடையில் மீளிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடாத்தப்படும் இவ்விழாவில் இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்வருடாந்த திருவிழாவின் போது கோவிலுக்கு வருகை தரும் பக்கதர்களுக்கான அன்னதானம் பணியையும் இராணுவத்தினர் வழங்கவுள்ளனர்.

திருவிழா தினத்தன்று விமானப்படையினர் வானிலிருந்து பூத்தூவி அம்மனுக்கு அஞ்சலி செலுத்தவுள்ளனர் என்றும் இராணுவ ஊடகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# ஊடகங்கள் உண்மைத் தன்மையோடு செய்திகளை வெளியிட வேண்டும்

### வடமாகாணசபை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஊடகங்கள் உண்மைத் தன்மையோடு செய்திகளை வெளியிட வேண்டுமென்பதுடன் ஊடக தர்மம் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவு தொடர்பில் கூறப்பட்ட விடயங்கள் திரிவுபடுத்தப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் உண் மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளன.எனவே, ஊடகங்கள் உண்மைத்தன்மையோடு செய்திகளை வெளியிட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

அத்துடன், யாழ் - கிளிநொச்சி இரணைமடு குடிநீர்த் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில 23,000 மில்லியன் ரூபாவை இலங்கை அரசு ஒதுக்கியுள்ள நிலையில் அதற்கான வட்டியையும் கட்டி வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளினதும் மக்களினதும் நலன்களுக்கு எதிராகவும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஏனைய திட்டங்களையும் உள்வாங்கி அவை குறித்தும் ஆராயப்பட வேண்டும்.

இக் குடிநீர்த் திட்டத்தை நழுவவிடாது இம் மாவட்ட விவசாயிகளின் கருத்தை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென்பதுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியுதவியினை மீளச் சென்றுவிடாது கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், யாழ்.குடாநாட்டிலுள்ள குளங்களில் நீரை தேக்குவதன் ஊடாக நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியுமென்பதுடன் அதற்கான நடவடிக்கையினை சிறப்பாக ஆராய்ந்து முன்னெடுக்க வேண்டுமென்றும் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் கிடைக்கப் பெற்ற நல்ல சந்தர்ப்பங்கள் எமது தவறான அரசியலால் தவற விடப்பட்டுள்ளன.

எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான வரலாற்றுத் தவறுகள் ஏற்படாத வகையில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அத்துடன், வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபைக்கும் தனியார் பேருந்து சங்கத்திற்கும் இடையே ஒரு நல்லுறவைப் பேணும் வகையில் நேர அட்டவணையை மாகாண அரசு ஒழுங்கமைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## சுதேச வைத்திய அபிவிருத்தி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் சம்மாந்துறை ஆயுர்வேத மாவட்ட வைத்திய சாலை மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளின் அபிவிருத்திப் பணிகளின் அங்குரார்ப்பண முப்பெரும் விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

மேலும், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் விஷேட குழந்தைப்பராமரிப்புப் பிரிவை ஆரம்பித்து வைத்தல், வைத்திய அதிகாரிகளின் விடுதிகளை திறந்து வைத்தல், புதிய எக்ஸ்ரே இயந்திரம் கையளித்தல், சுகவாழ்வு நிலையம் திறந்து வைத்தல் போன்றவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில், நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.தவம், ஏ.எல்.எம்.நஸீர், கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் கே.கருணாகரன், கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்திய திணைக்களத்தின் ஆணையாளர் வைத்தியர் திருமதி எஸ்.சிறீதர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.எல். அலாவுதீன், அம்பாறை பிராந்திய் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.சி.எஸ். தலகல, சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஏ.நஸீர், வைத்தியர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாடு கடத்திய 42 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு மாடு கடத்தல் தொடர்பாக அண்மைச் சம்பவத்தில் 42 சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு 32 வழக்குகள் அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டதாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு இலட்சத்து 6 ஆயிரம் ரூபா நீதிமன்றினால் தண்டம் அறிவிடப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ்மாவட்டத்தில் இருந்து இலக்கமிடப்பட்ட மாடுகள் வேறு இடங்களுக்கு கடத்தப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட கால்நடை திணைக்கள அதிகாரியினால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு பதிலளித்தார். (பா)

## வைத்தியர் வெற்றிடங்கள் வருட இறுதிக்குள் நிரப்பப்படும்

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர் வெற்றிடங்கள் இவ் வருட இறுதிக்குள் நிரப்பப்படவிருப்பதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர கடந்தவாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதியில் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் 60 வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தற்சமயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கும் சேர்த்து இந்த வருட இறுதிக்குள் வைத்தியர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும தெரிவித்தார்.

இதற்கென சுகாதார அமைச்சினால் வைத்தியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டு வைத்தியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## இன்று கொடியேற்றம்

கர்ணபரம்பரைச் செய்திகளின்படி ஸ்ரீ ஜெய நிராவிவ்ரகத்தி விநாயகர் ஆலயம் இந்தியா காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக நீராவிப் பகுதியில் குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது.

அவர் வரும்போது தமது குலத் தெய்வமான திருமறைக்காடு இராவணனைக் கொன்றதனால் ஸ்ரீ இராமபிரானைப் பீடித்த பிரமசக்தியை உதைத்து நீக்கிய வீரகத்தி விநாயகரையும் தம்முடன் கொணர்ந்து தமது இல்லத்திற்குப் பக்கத்தில் மண் குடிசையில் ஸ்தாபித்தார்.

ஒல்லாந்தர் அரசில் திறைச்சேரித் தலைவராக இருந்த பூதரின் மகன் பூலோக முதலியார், தனதும் பிற்சந்ததியினதும், ஊர்ப்பொது மக்களினதும் ஆன்ம இலாபம் கருதி தனது குலகுருமார்களான வேதாரண்யக் குருக்களை வேதாரண்யத்தில் இருந்து வரவழைத்து தமது வீட்டின் பக்கத்தில் அவர்கள் வசிக்கக் காணி கொடுத்து அவர்களையும் நன்கு பராமரித்து வந்தார்.

அவருக்கு பின் அவர் பௌத்திரன் சிவகுருநாத முதலியாராலும், அவருக்குப் பின் ஆங்கில அரசியல் கச்சேரியில் சிறப்பராகக் கடமையாற்றிய Gate Mudaliar (இராசவாசல்) இரகுநாத முதலியாராலும் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டது. இவர் காலத்தில் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் தீக்கிரையாக அவர் செங்கட்டிகளாலும் சுண்ணாம்பாலும் இவ் ஆலயத்தைக் கட்டுவித்தார்.

அவருக்குப் பின் அவர் மகன் சம்பந்தநாத முதலியாராலும் அவருக்குப் பின் அவர் மக்களாலும் இவ் ஆலயம் பராமரிக்கப்பட்டது. அம் மக்கள் காலத்தில் இவ் ஆலயத்தின் கருவறை அர்த்த மண்டபம், சணடேஸ்வரர் சந்நிதி என்பன வெண்ணைக் கற்களால் கட்டப்பட்டன.

கடைசி மகன் இராமநாத முதலியாரின் மகன் சம்பந்தநாதர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைப்பித்தார்.

இரண்டாம் மகன் இரகுநாத முதலியார் மகன் (சம்பந்தநாதனுடைய ஒன்றுவிட்ட சகோதரி) செல்லம்மா வைத்திலிங்கம் ஆலயப் பொறுப்பை ஏற்றதும் தமதுகாணியில் சுமார் ஐம்பது பரபபை ஆலயத்துக்காக கொடுத்து விட்டார்.

அவர் விருப்பை நிறைவேற்ற அக்காணிகளை விற்று நீராவிப்பிள்ளையாருக்கு அழகிய சொக்கட்டான் மண்டபம், திருவாசி மண்டபம், வசந்த மண்டபம், ஐந்து நிலை இராஜ கோபுரம், சுற்று மண்டபங்கள் என்பன கட்டப்பட்டன.

செல்லம்மாவின் தம்பியார் சம்பந்தநாதர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அலங்காரத் திருவிழா இன்று அவர் மருமகன் இரகுநாத முதலியார் காலத்தில் கொடிமரம் தேர் என்பன அமைக்கப்பட்டு மகோற்சவமாக வளர்ந்துள்ளது,

வை .இரகுநாதமுதலியார்


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இந்தியாவில் புழுதிப்புயல் 45 பேர் உயிரிழப்பு



இந்தியாவில் டில்லியை மிகப்பெரிய சூறாவளி காற்று தாக்கியுள்ளது. இதில் புழுதிப்புயலுக்குள் சிக்கி 45 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தப் புழுதிப் புயல் மணிக்கு சுமார் 100 முதல் 130 கி.மீ. வேகத்தில் வீசியது.

அப்போது பலத்த மழையும் பெய்தது. புழுதிப் புயல் சீற்றம் காரணமாக டில்லியில் சுமார் 400 மரங்கள் வேரோடு சாய்ந்தன. 45 பேர் உயிரிழந்தனர்.

டில்லியை பந்தாடிய அந்தப் புயல் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக வட மாநிலங்களில் அச்சுறுத்தியது. அரியானா, ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் உட்பட பல மாநிலங்களில் புழுதிப்புயல் தாண்டவமாடியது.

இதில் பல்லாயிரக் கணக்கான வீடுகள் நொருங்கி சேதமடைந்தன. கார்களும் சேதமடைந்தன. பல ஊர்களில் மின்தடை ஏற்பட்டது.

புழுதிப்புயல் சீற்றம் காரணமாக டில்லியில் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கின. சுமார் 17 மணிநேரம் டில்லி மக்கள் மின்சார இணைப்பு கிடைக் காமல் அவதிப்பட்டனர்.

# 5 வருடம் பணயக்கைதியாக இருந்த அமெரிக்க வீரர் விடுதலை



5 ஆண்டுகளாக பணயக் கைதியாக பிடித்து வைத்திருந்த அமெரிக்க இராணுவ வீரரை ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் விடுவித்தனர்.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள பாக்டிக்கா மாகாணத்தில் இருந்து அமெரிக்க படையைச் சேர்ந்த சார்ஜண்ட் போவே பெர்க்டால் (வயது-28) என்பவரைத் தலிபானகள் கடந்த 2009ஆம் ஆண்டு கடத்திச் சென்றனர். அமெரிக்காவின் குண்டனாமோ சித்ரவதை கூடத்தில் அடைபட்டிருக்கும் 5 தலிபான்களை விடுவிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்த அவர்கள், அமெரிக்க இராணுவ வீரரை பணயக்கைதியாக அடைத்து வைத்திருந்தனர்.

அவரை விடுவிக்க இரகசியமாகவும், அதிகாரபூர்வமற்ற முறையிலும் பேரம் நடந்து வந்ததாகக் கூறப்பட்டது. இந்நிலையில், அமெரிக்க அரசு ஐந்து தலிபான்களை விடுதலை செய்ததாகவும், இதனையடுத்து, சார்ஜண்ட் போவே பெர்க்டால் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# மலேசியாவை உலுக்கிய வல்லுறவு





மலேசியாவில் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டு 38 பேரால் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியாவின் கெலான்டன் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமி, தனது தோழியை சந்திக்க சென்றிருந்தார்.

பின்னர் அவர்கள் இருவரும் தனிமையில் சந்தித்துப்பேசி கொண்டிருக்கையில், அங்கு மர்ம கும்பல் ஒன்று வந்து அச்சிறுமியை கடத்தி சென்றது. இதன் பின் குடிசை ஒன்றினுள் சிறுமியை அடைத்த அந்த கும்பல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளது. இதுகுறித்து பொலிசில் அளித்த புகாரின் பேரில் விசாரணை நடத்தப்பட்டு, சம்பவத்தில் ஈடுபட்டிருந்த 38 பேரின் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 13 பேரை கைது செய்த பொலிசார், 25 பேரை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் அந்த பெண்ணின் தோழியும் வல்லுறவுக்குட்படுத்தியிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிப்பதால், அவரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்கிடையே வல்லுறவில் ஈடுபட்டவர்களுக்கு இஸ்லாமிய சட்டப்படி கடும் தண்டனையும், அபராதமும் விதிக்க வேண்டும் என அந்நாட்டின் இஸ்லாமிய கட்சி வலியுறுத்தியுள்ளது.

# 14 பணியாட்களுடன் சென்ற தாய்லாந்துக் கப்பல் மாயம்

சிங்கப்பூரில் இருந்து மலேசியா வழியாக இந்தோனேசியா நோக்கி தாய்லாந்து நாட்டு எண்ணெய்க் கப்பல் கடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

14 பணியாட்களுடன் பயணித்த 'எம்.டி. ஆரபின்'4' என்ற கப் பலே காணாமற் போயுள்ளது.சிங்கப்பூர் முனையத்தில் இருந்து புறப்பட்டுச்சென்றதைத் தொடர்ந்து அதிகாரிகளுடனான தொடர்பை இழந்து விட்டது. இந்தக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச கடல் முனையம் தெரிவித்துள்ளது. மலேசியாவில் கடந்த ஏப்ரல் மாதம் இதேபோல் எண்ணெய்க் கப்பல் கடத்தப்பட்டது. அதில் இருந்த மூன்று மில்லியன் லீற்றர் எரிபொருள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆபாச உடையானது இந்திய தேசியக்கொடி

## நடிகையை கைது செய்யக் கோரிக்கை

நடிகை மல்லிகா ஷெராவத் தேசியக் கொடியை அவமதித்து விட்டதால் அவரைக் கைது செய்ய வேண்டும் என்று கோரிக்கை வலுத்துள்ளது.

மல்லிகா ஷெராவத் நடித்த டர்ட்டி பாலிடிக்ஸ் என்றபடத்தின் விளம்பரப் பிரசுரம் வெளியிடபட்டு உள்ளது.

அதில் அவர் மூவர்ண கொடியில் உள்ள நிறத்தில் உள்ள ஆடையை ஆபாசமாக அணிந்து விளம்பர பிரசாரம் கொடுத்துள்ளார்.

பன்வாரி தேவி என்ற பாலியல் தொழிலாளி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ராஜஸ்தான் அரசியல்வாதிகளிடம் தொடர்பு கொண்டு அவர்களுடன் ஆபாசமாக இருப்பது போன்ற காணொளிகள் எடுத்து மிரட்டி வந்தார்.

இந்த கதையை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படம்தான் டர்ட்டி பாலிடிக்ஸ். இந்தப் படத்தின் விளம்பரத்தில் அரசியல் வாதியின் கார் ஒன்றில் படுகவர்ச்சியாக உட்கார்ந்திருக்கும் மல்லிகா ஷெராவத் கையில் சிடி ஒன்றை வைத்துள்ளார்.



பின்புறத்தில் ராஜஸ்தான் மாநில சட்டமன்றம் உள்ளது. தேசியகொடியின், நிறத்தில் ஆடையை ஆபாசமாக உடுத்தி உள்ளார்.

இதனைத் தொடர்ந்து பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச்சேர்ந்தவர்கள் மல்லிகாவை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனப் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

## உலகச் செய்திகள்

# பதவி மாறிய விஜயகாந்

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் முதல் பொதுச்செயலாளர் என்ற பதவியை பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்.

தே.மு.தி.க நிறுவனத்தலைவர் விஜயகாந்த் எப்போதும் அறிக்கை விட்டாலும் நிறுவனத் தலைவர் என்ற பதவியை பயன்படுத்துவார்.ஆனால் நேற்று முன்தினம் அவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் என்றே குறிப்பிட்டு இருந்தார்.

தே.மு.தி.க பொதுச்செயலாளராக இருந்த ராமுவசந்தன் மறைவுக்குப் பிறகு அந்தப் பதவி யாருக்கும் கொடுக்கப்படாமல், வெற்றிடமாகவே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# 113 வயதில் மலர்ந்த மூதாட்டியின் காதல் திருமணம்



சீனாவில் 113 வயது மூதாட்டி ஒருவர் 70 வயது முதியவரைத் திருமணம் செய்துள்ளார்.

ஜின்ஜியாங் பிராந்தியத்தில் பாச்சு கவுன்டியில் இருக்கும் முதியோர் இல்லத்தில் அசாத்திஹானும், அய்மதியும் கடந்த டிசம்பர் மாதம் சந்தித்துக் கொண்டனர்.

பின்னர் இருவரும் 6 மாதமாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ ஆரம்பித்தனர். இப்போது முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

பின்னர், தங்களது திருமண புகைப்படங்களை சீன பத்திரிகைகளுக்கு விநியோகித்தனர்.

இதுகுறித்து அசாத்ஹான் கூறுகையில், நாங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். என்னைவிட வயதில் மூத்த பெண்ணை திருமணம் செய்து கொண்டதற்காக கவலைபபடவில்லை. சாப்பாட்டின்போது எனக்கு கறி சமைத்து போட்டு, என்னை அன்பாக கவனித்து கொள்கிறாள்.ஒருவரை ஒருவர் கவனித்து கொள்வதில், இன்றும் நாங்கள் இளமையாக இருப்பதாக நினைக்கிறோம் என்று கூறியுள்ளார்.

# பொலிஸ் சேவையில் பெண்கள்; அச்சுவேலியில் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் பெண் பொலிஸ் பரிசோதகர்களுக்கான மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் நேர்முகத் தேர்வு நேற்று நடைபெற்றதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயசிங்க தெரிவித்தார்.

நேற்றுகாலை 9.00 மணியிலிருந்து நண் பகல் 12.00 மணி வரைக்கும் இந்நேர்முகத்தேர்வு நடைபெற்றது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிற்குட்பட்ட 350 பெண்களுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பரிசோதகர்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில, நேற்று மட்டும் 7 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை, 100 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்களுக்கான நேர்முகத் தேர்விற்கு வருகை தந்திருந்ததாகவும், இந்நேர்முகத் தேர்வு ஆண்களுக்கான நேர்முகத் தேர்வு அல்ல என்றும் அவர் மேலும் கூறினார்.

வடமாகாணத்தில் 100 பெண் பொலிஸ் பரிசோதகர்களும், 400 பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்குமான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாகவும் யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(25)

## ஐ.நா. விசாரணைக்குழு; உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் இல்லை

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணைக்குழு குறித்து இன்னமும் தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை குறித்த விசாரணைக்குழு நியமிக்கும் பணி இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் விசாரணைக்குழு ஒன்றை நிறுவவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மார்ச் மாத அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தில் இலங்கை தொடர்பில் விசாரணைக் குழுவொன்றை நிறுவ வேண்டுமெனவும், அந்த அதி காரத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளருக்கு வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. விசாரணைக்குழுவில் அங்கம் வகிப்போர் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்ட போதிலும், இதுவரையில் உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள வழமையான அமர்வுகளின் போது இலங்கை தொடர்பான விசாரணைக்குழு குறித்து நவநீதம்பிள்ளை அறிவிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

இலங்கை தொடர்பிலான விசாரணைக்குழு நிறுவப்பட்டதன் பின்னரே அதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## வடக்கு...

இந்தியா மாத்திரம் தனித்து தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் துரித கதியில் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லதைக் கொடுத்தால் நல்லது கிடைக்கும் என்ற எண்கக்கருவின் அடிப்படையில் 13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் முறியடிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதென அவர் தெரிவித்துள்ளார். ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றியானது இலங் கைத் தமிழர் பிரச்சினையால் கிடைக்கப் பெறவில்லை எனவும், தி.மு.க.வின் 2 ஜீ ஸ்பெக்ட்ரம் உள்ளிட்ட பல்வேறு ஊழல் மோசடிகள் அம்பலானதனால் ஜெயலலிதா ...ற்றியீட்டியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புலிகளுக்கு ஆதர...கச் செயற்பட்டு வரும் வை.கோ. சொந்தத் தொகுதியில் தோல்வியைத் தழுவியதாகத் தெரிவித்துள்ளார்.

சினிமாத்துறையைச் சார்ந்தவர்கள் அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் இதில் அதிகமானவர்களுக்கு புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் நிதி உதவி வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியின் பலவீனமான நிர்வாகமே இலங்கை சீனாவுடன் நெருங்குவதற்கான காரணம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்து வ்தன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். 13ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பின்னர் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மோடி ஊடாக...

முடியாது எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டம் அல்லது அதற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை வழங்குமாறு நரேந்திர மோடி ...லைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கம் கோரியுள்ளது. ...னினும், இலங்கையின் அதிகாரப் பகிர்வு விவகாரங்களில் இந்தியா ஏதேச்சாதிகாரப் போக்கைப் பின்பற்ற அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நரேந்திர மோடியோ அல்லது வேறு•நாடோ இலங்கை எவ்வாறான அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்பதனை நிர்ணயிக்க முடியாது என வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்பதனை இலங்கை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டுமெனவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகத் தீர்வு வழங்கப்படும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்திய மாநிலங்களுக்கு எவ்வாறான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பது குறித்து இலங்கை, இந்திய மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்ட யோசனையை இந்தியா இலங்கை மீது திணித்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரே குடும்பத்தில்...

இந்நிலையில், குறித்த நபர் தனது குழந்தையினைத் தூக்கிச் சென்று அருகில் இருந்த காட்டுப்பகுதியில் உள்ள மாமரத்தின் கீழ் இருந்து தனது குழந்தைக்கு நஞ்சு அருந்தக் கொடுத்துவிட்டு தானும் மாமரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அவ்விடத்திற்கு சென்ற நபர்கள் சடலம் இருப்பதைக் கண்டு பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

அதன்போது, சம்பவ இடத்திற்கு வந்த பருத்தித்துறை பொலிஸாருக்கு, பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சடலத்தினை ...ார்வையிட்ட பின்னர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ...ப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குழந்தையின் சடலத்தின் அருகில் சோடா போத்தல் மற்றும் டிப்பி டிப்பி போன்ற பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பருத்தித் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரு சடலங்கள் தொடர்பான விசாரணையினை பருத்தித் துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(25, 116)

## மழை பொழிய வாய்ப்பு

சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என காலநிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், மாலை அல்லது இரவு வேளைகளில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொது மக்கள் இழப்புகளை தவிர்க்கும் பொருட்டு அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## வடமாகாணத்துக்கு...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அதனை வழங்குவதால் சிக்கல் ஏற்படாது என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டுள் ளார். ஆனால் பொலிஸ் அதிகாரத்தை வடக்கைத் தவிர ஏனைய மாகாண சபைகளுக்கு வழங்குவதே தற்போது சிக்கலாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய..

ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் பெணர்டிக் சகாய நாதன் மிராண்டா தெரிவித்தார்.

## யாழ்ப்பாணம்...

ரதத் திணைக்களப் பொது முகாமையாளர் ஜி.ஏ.பி. ஆரிய ரத்ன தெரிவித்துள்ளார்.

நாவற்குழிப் பாலத்தை புனரமைக்கும் பணிகள் தற்போது பூர்த்தியடையாமல் காணப்படுவதால், சாவகச்சேரிவரை ரயில் சேவைகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந் நிலையில், இந்த வருட இறுதிக்குள் யாழ். வரை ரயில் சேவைகள் இடம்பெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆஸி.யில் இலங்கையர் தீயில் எரிந்து மரணம்

அவுஸ்ரேலியாவில் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தனக்கு தானே தீ வைத்த சம்பவம் ஒன்று? Melbourn Jee long என்னும் இடத்தில் இடம் பெற்றுள்ளதாக குடிவரவு அமைச்சர் மொரிசன் தெரிவித்துள்ளார்.

90 வீத எரிகாயங்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் உயிர் இழந்துள்ளதாக வைத்தியசாலைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் ஒரு இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் என அமைச்சர் மொரிசன் மேலும் தெரிவித்துள்ளார்.

## மேலும் 37 பேர் இராணுவ சேவையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 37 தமிழ் இளைஞர்கள் இராணுவ சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையின் போதே இவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டதாக இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

இந்த நேர்முகத் தேர்வில், குறித்த மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் 44 பேர் தோற்றிய போதிலும் அவர்களில் 37பேர் மாத்திரமே தெரிவானதாக இராணுவம் குறிப்பிட்டது.

இவ்வாறு இணைக்கப்பட்டவர்கள், இராணுவத்தின் பொதுச் சேவையணி, இராணுவ பொறியியற் பிரிவு மற்றும் பொறியியற்சேவை றெஜிமன் ஆகிய படையணிகளிலேயே சேவைக்கமர்த்தப்படவுள்ளனர் என்றும் இராணுவத் தலைமையகம் மேலும் கூறியது.

## கொழும்பில் கடும் மழை

கொழும்பில் நேற்று மாலை பெய்த கடும் மழை காரணமாக பாரிய வெள்ளம் ஏற்பட்டதுடன் வாகன நெரிசலும் ஏற்பட்டன. கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் மாலை தொடர்ச்சியாக கடும் மழை பெய்த நிலையில் பல வீதிகளில் சுமார் நான்கு அடிக்கு மேல் வெள்ள நீர் நிற்கின்றது. இதனால் தாழ் நிலப்பகுதிகளில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மேலும் கொழும்பில் அதிக பகுதிகளில் போக்குவரத்துக்கு நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பம்பலப்பிட்டி, தும்முல்ல சந்தி, ஒருகொடவத்தை சந்தி, ஆமர் வீதி, பேலியகொட சந்தி உள்ளிட்ட சில பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நொருக்கப்பட்டன மயானத்திலுள்ள கல்லறைகள்

(திருகோணமலை)

திருகோணமலை நகர சபையின் பராமரிப்பிலுள்ள அன்புவழிபுரம் மயானத்திலுள்ள கல்லறைகளில் அடையாளம் காணப்பட்ட ஒரு சில கல்லறைகளே சேதமாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

சேதமாக்கப்பட்டுள்ள கல்லறைகளில் மூதூா சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட பணியாளரொருவருடைய கல்லறையும் அடங்குவதாக உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.

யுத்த நிறுத்த காலத்தில், விடுதலைப் புலிகளின் பொங்கு தமிழ் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவராக செயல்பட்டு, பின்னர் அடையாளம் தெரியாத ஆட்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட என்.விக்கினேஸ்வரனுடைய கல்லறையும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நேரில் சென்று பார்த்தவர்கள் கூறுகிறார்கள். இச்செயலில் ஈடுபட்ட நபர்கள் கல்லறைகளில் பொறிக்கப்பட்டிருந்த புகைப்படங்கள் மற்றும் பெயர் விபரங்களை அடையாளம் காண முடியாதவாறு அகற்றி சேதப்படுத்தியுள்ளதாகவும் அங்கு சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் அறிந்து திருகோணமலை நகரசபைத் தலைவர் கே.செல்வராசா அந்த இடத்தை சென்று பார்வையிட்டுள்ளார்

# கைத்தொழில்சார் உற்பத்தி தொழிற்சாலை; அச்சுவேலி தொழிற்பேட்டையில் அடிக்கல்



அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் சாரா தனியார் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் நாட்டி வைத்தனர்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் நேற்று மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

அந்தவகையில், செல்வா ஹாட்வெயர் என்ற வியாபார நிலையத்தை நடாத்தி வரும் செல்வராஜன் கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் சாரா தனியார் (வரையறுக்கப்பட்ட) தொழிற்சாலையினை நிறுவவுள்ளார். இத்தொழிற்சாலையில் இரும்பு, பித்தளை, அலுமினியம் சார்ந்த வீட்டுக்கும் விவசாயத்துக்குமான உலோகப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

தொழிற்சாலை இயங்கும் பட்சத்தில் 120 இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. இதில் அடிக்கற்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் நாட்டி வைத்தனர்.

குறித்த கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் ஏற்கனவே சில தொழிற்சாலைகளுக்கான அடிக்கற்கள் நாட்டி வைக்கப்பட்ட நிலையில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் நிதியுதவியுடன் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை மீளவும் புதுப்பொலிவுடன் தனியார் தொழிற்துறையினரின் பங்களிப்புடன் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், கைத்தொழில் அபிவிருத்தி சபை பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், ஈ.பி.டி.பி.யின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளர் ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு உடுவில் பிரதேச சபையின் ஆலோசனை வழிகாட்டலுடன் உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய மலேரியா மற்றும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து சென்று சுன்னாகம் ஐயனார் ஆலயத்தடியில் நிறைவு பெற்றது.

டெங்கு நாட்டிற்கு கேடு, டெங்கை இல்லாது ஒழிப்போம், டெங்கு உயிர் கொல்லும் ஆனால் தவிர்க்க வழியுண்டு, மலேரியாவை கட்டுப்படுத்துவோம், வீணான உயிரிழப்புக்களைத் தடுப்போம், எம்மை நாமே பாதுகாப்போம் போன்ற பதாகைகளைத் தாங்கி இளைஞர்கள் பேரணியாகச் சென்றனர்.

அத்துடன் டெங்கு மற்றும் மலேரியாவை ஒழிக்கும் வழிமுறைகள் அவற்றினை தடுக்கும் வழிகள் அடங்கிய துண்டுப்பிரசுரமும் விநயோகிக்கப்பட்டது.

இப் பேரணியில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ், ஜே/196 கிராம உத்தியோகத்தர் பா.பாலபத்மன், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன், உடுவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கார்த்தீபன். இளைஞர் சேவை உத்தியோகத்தர்களான ஆர்.யுகராஜ், எஸ்.அனுஷன், யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.விஜிதரன், தேசிய சம்மேளன பிரதிநிதி எஸ்.லக்ஷன் உள்ளிட்ட பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர். (48)



**நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரி வீதி ஊடாக பருத்தித்துறை வீதிக்கு செல்ல முற்பட்ட ஆட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து கழிவு நீரோடையினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆட்டோவின் சாரதி சிறு காயமடைந்தார். (படம் - 25)**

## செவிப்புலன் அற்றவர்களுக்கு விசேட சிகிச்சை

வவுனியா பொது வைத்தியசாலையில் செவிப்புலன் அற்றோருக்கான இருநாள் சிகிச்சையளிக்கப்பட்டு செவிப்புலன் கேள் கருவி வழங்கல் நிகழ்வொன்று இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகளின் வன்னி கட்டளைத் தலைமையகத்தின் அனுசரணையுடன் அரச சார்பற்ற தொண்டு நிறுவனமொன்றினால் எதிர்வரும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் வவுனியா பொது வைத்தியசாலையில் செவிப்புலன் அற்றோருக்கான விசேட சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளது.

இதன் பிரகாரம் செவிப்புலன் கருவிகள் தேவையுடையோருக்கு இலவசமாக கருவிகளையும் வழங்குவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இச்சிகிச்சையினையும் கருவியினையும் பெற விரும்புபவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையின் காது, தொண்டை தொடர்பான சிகிச்சை நிலையத்தில் உடன் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளும் பட்சத்தில் சிகிச்சையினை இலகுவாக பெற முடியும் என தெரிவித்தார்.

## முதியவரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

காலையில் நாகர்கோவில் தெற்குப் பகுதியில் மக்கள் குடியிருக்காத பிரதேசத்தில் உள்ள சேதமடைந்த வீடு ஒன்றுக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் வெளிச்சவீட்டு வீதியைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை (வயது - 72) என்பவர் என அடையாளம் காணபட்டுள்ளார். இவர் சுமார் ஒரு வாரங்களுக்கு முன்னர் இறந்திருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25,18)

# 7 ஆவது ஐ.பி.எல். தொடரில் கிண்ணம் வென்றது கொல்கத்தா



பஞ்சாப் மற்றும் கொல்கத்தா அணிகளுக்கிடையில் நேற்று பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற 7 ஆவது ஐ.பி.எல். தொடரின் இறுதியாட்டத்தில் கொல்கத்தா அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் களத்தடுப்பை தேர்வுசெய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணி ஆரம்பத்தில் மெதுவாகவே ஓட்டங்களைப் பெற்றது. சேவாக் 7, பெய்லி 1 ஓட்டத்துடனும் விரைவாக ஆட்டமிழந்தனர்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த வோஹ்ரா, சகா ஜோடி கொல்கத்தா பந்துவீச்சை சிதறடித்து ஓட்டங்களைக் குவித்தது. வோஹ்ரா 67 ஓட்டங்களுடனும், ஆட்டமிழக்காமல் சதம் விளாசிய சகா 115 ஓட்டங்களையும் குவிக்க பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 199 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் சாவ்லா 2, யாதவ் மற்றும் நரைன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 200 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி விரைவிலேயே உத்தப்பாவை இழந்தாலும் கம்பீர் மற்றும் பாண்டே ஆகியோரின் இணைப்பாட்டத்தால் வெற்றியிலக்கை நோக்கி விரைவாக முன்னேறியது.

கம்பீர் 23, யூசுப் பதான் 36 எடுத்து அணிக்கு கைகொடுத்தனர். அதிரடியாக ஆடி அணிக்கு வெற்றிதேடிக் கொடுத்த பாண்டே 94 ஓட்டங்களை விளாசினார். இறுதிக்கட்டத்தில் களமிறங்கிய சாவ்லா ஒரு சிக்ஸ், ஒரு பவுண்டரி விளாச ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இறுதியில் 19.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்று ஐ.பி.எல். கிண்ணத்தை இரண்டாவது தடவையாகவும் தம்வசப்படுத்தியது கொல்கத்தா.

பந்துவீச்சில் கரன்வீர் சிங் 4, ஜோன்சன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக பாண்டேயும் தொடரின் சிறப்பாட்டக்காரராக மக்ஸ்வெல்லும் தெரிவாகினர்.

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிப பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காரைநகர் அம்மன் கோவில் வீதிப் பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு நாகேஸ்வரி (வயது - 52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் கிணற்றிற்கு தண்ணீர் அள்ளச் சென்றுள்ளார். அதன்போது கிணற்றிற்குள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த வயோதிபரின் மரணம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

# நூல் அறிமுக விழா



(யாழ்ப்பாணம்)

சி.அ.ஜோதிலிங்கத்தின் இரு நூல்கள் அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தமும் தமிழ் மக்களும் மற்றும் இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்பும் ஆகிய இரு நூல்களையும் சி.அ.ஜோதிலிங்கம், இருதய நோய் வைத்திய நிபுணர் பூ.லக்ஸமனிடம் வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் க.சிற்றம்பலம் மற்றும் வடமாகாண உறுப்பினர் அனந்தி சசிதரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (25,பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.